# சபை ஒழுங்குகள்

## இறைத் திருவுள்ளச்சபை

**Trois – Rivieres, Canada**

**1999**

பொருள் அட்டவணை

திருத்தந்தையின் அனுமதி சாசனம்

தற்போதைய சபை ஒழுங்குகள் அனுமதிக்கப்பட்ட சாசனம்

சபை நிறுவுநரின் முன்னுரை

**பகுதி : 1 - இறைத் திருவுளச் சபை**

இயல் - I : இயல்பு, தனிவரம், சபையின் நோக்கம்

இயல் - II : சபையின் ஆன்மீகம்

இயல் - III : சபையின் அப்போஸ்தலிக்கக் குறிக்கோள்

இயல் - IV : சபையின் உறுப்பினர்கள்

இயல் - V : சபையில் பயிற்சி

பொது அம்சங்கள்

சிறப்பு அம்சங்கள்

இயல் - VI : சபையில் குழுவாழ்வு

**பகுதி : 2 – அர்ப்பண வாழ்வு**

இயல் - I : அர்ப்பணம்

கீழ்படிதல்

ஏழ்மை

கற்பு

வார்த்தைப்பாட்டுப் படிவம்

இயல் - II : சபையில் இணைக்கப்படுதல்

சேர்க்கை

தொடக்கப்பயிற்சி

பயிற்சி

அர்ப்பணம்

நிரந்தரம், இணைப்பு, அருட்பொழிவுக்கு அழைப்பு விடுத்தல்

சபையிலிருந்து விலகிச் செல்தல்

இயல் - III : நோயுற்றார் மற்றும் மரித்தோர்

**பகுதி : 3 – இணை உறுப்பினர்களின் வாழ்வு**

இயல் - I : இணை உறுப்பினர்கள்

இயல் - II : இணை உறுப்பினர்களின் அர்ப்பணம்

இயல் - III : இணை உறுப்பினர்களின் பயிற்சி முறை

சேர்க்கை

தொடக்க நிலைப் பயிற்சி

பயிற்சி

அர்ப்பணம்

நிரந்தர நிலை

சபையிலிருந்து விலகுதல்

இயல் - IV : இணை உறுப்பினர்களின் பயிற்சி முறை

இயல் - V : நோயுற்ற மற்றும் இறப்பு நிலையில் உள்ள இணை உறுப்பினர்கள்

**பகுதி : 4 – சபையின் நிர்வாக முறை**

இயல் - I : அதிகாரம் பணிபுரியவே

இயல் - II : சபையில் பணியதிகாரம்

இயல் - III : பொதுப் பேரவை

இயல் - IV : இயக்குநர் (சபைத் தலைவர்)

இயல் - V : பொதுக் குழு

இயல் - VI : பொதுச் செயலர் மற்றும் பணிகளின் செயல்பாட்டு இயக்குநர்

இயல் - VII: நிதி நிர்வாகம்

இயல் -VIII: மாநிலங்கள்

இயல் - IX : பகுதிகள்

பின்னிணைப்பு

## திருத்தந்தையின் ஆணைக் கடிதம

1965 ஆம் ஆண்டு ஜூலை 22ம் நாள் எட்மட்ஸன் தல ஆயர் (கனடா) அவர்களால் திருஅவைச் சட்ட முறைகளின்படி திருப்பணி நிலையினர் சபையாக நிறுவப்பட்டது. 25 ஆண்டுகளுக்குப்பின் இச்சபையின் வளர்ச்சியை மனதில் கொண்டு

திருத் தந்தையால் அங்கீகரிக்கப்பட்ட சபையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எட்மன்ஸடன் தல ஆயர் மற்றும் 16 மற்ற தல ஆயர்களால் பரிந்துரைக்கப்பட்டது.

தனது குருத்துவ அருட் பொழிவு வாழ்வின் 50வது ஆண்டை நினைவு கூறும் அருட் திரு லூயி மரிய பேரண்ட் OMI விண்ணப்பிப்பதாவது. சபையின் உறுப்பினர்கள், தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிய இயேசுவின் கருவிகளாகத் திகழத் (Const. 2) தேவையான ஆன்மீக குண நலன்களையும், மாசற்ற கன்னி மரியாளைத் தங்களது வாழ்வின் முன்மாதியாகவும் கொண்டு, அமைதியை நிலைநாட்டுவதும், இயேசுக் கிறிஸ்துவுக்குள் சகோதரத்துவத்தையும் நிலை நாட்டுவதே இவர்களின் அப்போஸ்தலிக்க நோக்கமாகும்.

திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்து இச்சபை, தனது, நோக்கத்தை நிறைவேற்ற பல்வேறு நாடுகளில் செயல்பட்டு வருகிறது. பல்வேறு அழைத்தல்களும் பெருகிக் கொண்டே போகிறது. இந்த நோக்கமானது இணை உறுப்பினர்கள் வழியாகவும் செயல்படுகிறது. இவர்களுடைய செயல்பாட்டு அனுபவம் ஆன்மீக மற்றும் அப்போஸ்தலிக்கப் பணி வாழ்வை உள்ளடக்கியதாகவும், இதற்காக இவர்கள் தங்கள் உறுப்பினர்களுக்கும், பொது நிலையினருக்கும் தருகின்ற அக்கறையுள்ள பயிற்சியும் இவர்களது நம்பகத் தன்மையை நன்கு வெளிப்படுத்துகிறது.

ஆகவே அனைத்து அம்சங்களையும் மனதில் கொண்டு, மற்றும் தலத்திரு அவை ஆயர்களின் பரிந்துரையையும் மனதில் கொண்டு, துறவற மற்றும் உலகியல் துறவற சபையின் (Secular Institution) தலைமைப் பேராயம் 1987 ஆம் ஆண்டு ஏப்பிரல் 3 ஆம் நாள் நடந்த கூட்டத்தில் இறைத் திருவுள சபையை, திருத்தந்தையின் அதிகாரத்திற்கு உட்பட்ட சபையாக ஏற்றுக்கொள்கிறது.

1987 ஆம் ஆண்டு ஜீன் 30 ஆம் நாள் திருத் தந்தை இரண்டாம் ஜான் பால் இதற்கு அனுமதியும் வழங்கியுள்ளார். எனவே, துறவற மற்றும் உலகியல் துறவற சபைகளின் பேராயம் இந்த ஆணை மூலம் இறைத் திருவுள சபையைத் திருத்தந்தையின் அதிகாரத்திற்கு உட்பட்ட அனைத்து அதிகாரங்கள் மற்றும் நலன்களும் நிறைந்த சபையாக அங்கீகரிக்கப்படுகிறது. (இதற்கு மாறுபட்ட எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை) உரோமையில் தரப்பட்டது.

1987 ஜுலை 12

**ஜே. ஜெரோம் கர்தினால் ஹமர் OP**
தலைவர்
வின்சென்டியுஸ் பாகியோலா
பேராயர்
செயலர்

# இன்றைய சபை ஒழுங்குகளை அங்கீகரித்து வழங்கப்படும் ஆணை

திருத் தந்தையின் அதிகாரத்திற்குட்பட்ட திருப்பணியாளர்களில் உலகியல் சபை இன் புதிய திரு அவைச் சட்டத்தின் ஒளியில் எழுதப்பட்ட, திருவுளச் சபையின் புதிய சட்ட ஒழுங்குகள் அனைத்தையும் உடனடியாகப் பரிசீலித்து அனுமதி வழங்க வேண்டுமென்று விண்ணப்பிக்கப்பட்டது.

துறவற மற்றும் உலகியல் துறவற சபைகளின் பேராயமானது, குறிப்பிட்ட ஆய்வுக்குழுவின் பரிசீலனைக்குப் பின், ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள பிரெஞ்சு மொழியில் உள்ள சபையின் ஒழுங்குகள் அனைத்தையும் அங்கீகரிக்கிறது. அனைத்துச் சட்ட விதிகள் அனைத்தும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

இதில் குறிப்பிடப்பட்ட அனைத்தும் அங்கீகரிக்கப்படுகிறது. உரோமையில் வழங்கப்பட்டது.

1988, செப்டம்பர் 21 ஆம் நாள்

**ஜே. ஜெரோம் கர்தினால் ஹமர் OP**
தலைவர்
வின்சென்டியுஸ் பாகியோலா
பேராயர்
செயலர்

# சபை நிறுவுநரின் முன்னுரை

கடவுள் மீது நாம் கொண்டுள்ள அர்ப்பணத்தின் வெளிப்பாடு தான் இந்தச் சட்ட ஒழுங்குகள். அவர் மீது நாம் கொண்டுள்ள உடன்படிக்கையின் வெளி அடையாளம். இவற்றில் தான் நற்செய்தியின் ஒளியைக் காண்கின்றோம். நம் ஒவ்வொருவரிலும், இயேசு தம்மை வெளிப்படுத்துவதைக் காண்கின்றோம். நம்மையே நாம் முழுமையாக ஒப்புக் கொடுக்கிறோமா என்பதை ஆய்வு செய்வதற்கு ஒரு வாய்ப்பு, கடவுளின் திருமகனில் வெளிப்பட்ட அனைத்தையும் செயல்படுத்த, ஆவியின் அருட் துணையாலும், அன்னை மரியாள் நம்மோடு வழித் துணையாய் வருவதாலும், நாம் தூண்டப்பட்டு, நம் குழு உறுப்பினர்களின் எடுத்துக்காட்டான வாழ்வாலும் தூண்டப்பட்டு, இந்த ஒழுங்குகளை நம் வாழ்வின் அடிப்படை உணர்வாக வைத்து வாழ வேண்டும்.

ஒரு சிறப்பான வாழ்வுக்கு இயேசுவால் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நன்கு உணர்வோம். இந்த அர்ப்பணவாழ்வின் மூலம் நாம் இன்றைய உலகின் மத்தியில் மகத்தான வாழ்வு வாழ்ந்து, இந்த உலகு வழியாகவே இயேசுவை வெளிப்படுத்த வேண்டும். இயேசு தன் பணிவாழ்வில் எவ்வாறு தம் தந்தையால் வழி நடத்தப்பட்டாரோ, அதே போல நாமும் நம் வாழ்வில் இயேசுவால் வழி நடத்தப்படவேண்டும்.

இயேசு தன் சீடர்களுக்குக் கூறியதையே நம்மிடமும் கூறுகின்றார். நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். (யோவான் 15:16)

இந்தச் சட்ட திட்டங்கள் வெறும் சட்டங்கள் மட்டுமல்ல மாறாகக் கடவுளின் ஆவியை நம்மில் வெளிப்படுத்தும் ஒரு வெளி அடையாளம். நமது அழைத்தலை நன்கு உணர்ந்து அவரில் இணைந்து வாழ கடவுள் அழைப்பு விடுக்கிறார். அவரது சாட்சிகளாக இவ்வுலகில் வாழ்ந்து, அவரது அன்பையும், இரக்கத்தையும் நம் வாழ்வு மூலம் பிறருக்கு வழங்க அழைக்கிறார்.

இந்தச் சட்ட ஒழுங்குகள் அனைத்தும் திரு அவையின் சொத்து. ஏனென்றால் நமது சபையை திருத்தந்தையின் அதிகாரத்திற்கு உட்பட்ட சபையாக திரு அவை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டிருக்கிறது. இயேசுவோடு நாம் நெருங்கிய நட்புறவு கொள்ள இது நமக்குத் துணை புரிகிறது. தூய ஆவியானவரின் குரலுக்குச் செவிமடுக்கவும், கடவுளின் திருவுளத்தைப் பின்பற்ற நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம் என்பதையும், உண்மையான அப்போஸ்தலிக்கப்பணி வாழ்வை இவ்வுலகில் வாழவும், இவை துணை புரிகின்றது.

சபை ஒழுங்குகளின் மீது ஈடுபாடு இல்லாத நிலை நமது அக்கறையின் மையையும், மந்த நிலையையும், ஆன்மீக வாழ்வில் ஏற்பட்ட தளர்ச்சியையும், நம் அழைத்தலில் பிடிப்பில்லாத தன்மையையும், மீட்கப்பட வேண்டிய ஆன்மாக்களின் மீது பொறுப்பற்ற தன்மையையும், அன்பு வாழ்க்கையிலும், பணி வாழ்க்கையிலும் ஏற்பட்ட தளர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றது. நம் சபை ஒழுங்குகள் நம் வாழ்க்கைப் புத்தகமாக இருக்க வேண்டும்.

கடவுளின் திருவுளத்தைக் கண்டு கொள்ள நம் சபை ஒழுங்குகள் நம் வாழ்வுக்கு ஓர் வரைபடமாகும். இதைப்படிக்கும் போது ஆவியானவரின் வழிகாட்டுதல்களால், நமது வாழ்வின் இக்கட்டான தருணங்களில் எப்படி இறைத் திருவுளத்தைக் காண வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டும் ஒரு வழிகாட்டி. எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்க்கையில் பைபிளையும், நம் சட்ட ஒழுங்குப் புத்தகத்தையும் நம் கரங்களில் தாங்கிக் கொள்வோம்.

நம் சபையில் இரண்டு வகையான உறுப்பினர்கள் உண்டு. முதலாவதாக வார்த்தைப் பாடுகளின் வழியாகத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். இரண்டாவதாக ஈடுபாட்டுடன் குடும்ப வாழ்வை வாழ்வதன் வழியாகத் தங்களை அர்ப்பணித்தவர்கள். நாமனைவருமே நமது ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்குத் துணையாக, ஆவியானவரின் தூண்டுதலால் நமக்குத் தரப்பட்ட இந்த சட்ட ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வாழும் நம்மை, நமது வாழ்வின் இறுதிநாளில், இயேசு நம் ஒவ்வொருவரையும், வாருங்கள் என் தந்தையின் ஆசிபெற்ற மக்களே என அழைப்பார்.

மங்கள வார்த்தையின் போது கடவுளால் அனுப்பப்பட்ட கபிரியேல் வானதூதர் வழியாக, தரப்பட்ட கடவுளின் விருப்பத்திற்கு அன்னை மரியாள் தன்னையே முழுமையாக ஒப்புக்கொடுத்தாள். அதைப் போல நாம் ஒவ்வொருவரும், கடவுள் நமக்குத் தருகின்ற இந்த இலவசக் கொடையாம் சட்ட ஒழுங்குகளை ஏற்றுக் கொள்வோம்.

அன்னை மரியாள் அவர்கள் தான் நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இதைத் தவிர வேறு ஏதும் தேவையில்லை. அன்னை மரியாளைப் போல நாமும் நம் வாழ்க்கையின் எல்லாச் சூழல்களிலும் நம் ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுவோம். சிலுவையடில் நின்ற வியாகுலத்தாய் அன்னை மரியாளைப் போல நாமும் சிலுவையடியில் நின்று, நமது வாழ்வின் இக்கட்டான சூழ்நிலைகளிலும் கடவுளின் மீட்புக்குச் சாட்சியம் கூறுபவர்களாக இருக்க உறுதியெடுப்போம்.

நாம் படிப்படியாக புனித நிலையை அடைய வேண்டுமென கடவுள் விரும்புகிறார். நமது சபை ஒழுங்குகளை ஆழ்ந்து செப சூழ்நிலையில் படிக்கும்போது இதை உணர்கிறோம். இயேசு நம்மீது கொண்டிருக்கும் இத்தகைய நம்பிக்கையை எண்ணும் தோறும் நமக்கு வியப்பாயில்லையா?

லூயி மரிய பாரன்ட் OMI

1988, டிசம்பர் 25

**( I have given one more translation, You choose the best one)**

### சபை நிறுவனரின் தொடக்க உரை

எல்லாம் வல்ல இறைவனுக்கு நாம் தரும் நமது அர்ப்பணத்தின் வெளி அடையாளம் தான் நமது சபை ஒழுங்குகள். இதில் நற்செய்தியின் அடித்தளத்தை, அதன் மதிப்பீடுகளைக் கண்டு கொள்கிறோம். இயேசுவின் வெளிப்பாட்டை நம் ஒவ்வொருவரிலும் நாம் உணர்கின்றோம். நாம் நம்மையே இறைவனுக்குத் தந்த அர்ப்பண வாழ்வை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து மீண்டும் நம்மை முழு மனதுடன் அர்ப்பணிக்கவும், கடவுளின் திட்டத்தைத் தன் வாழ்வில் முழுமனதோடு வாழ்ந்து காட்டிய இயேசு, தனது தூய ஆவியின் வல்லமையால் நம் அனைவரையும் வழி நடத்தி வருகின்றார். இத்தகைய பயணத்தில் நம் அன்னை தூய கன்னி மரியாள் நமக்குத் துணையாகத் தோள் கொடுத்து வருகின்றார். மேலும் நம்முடைய அடிப்படை அர்ப்பண உணர்வை நம் சகத் தோழர்களுடைய நல் எடுத்துக்காட்டான வாழ்வில் நம் அர்ப்பண உணர்வை மீண்டும் தூண்டியெழுப்பி வருகிறார்கள்.

நாமனைவரும் ஒரு தனிப்பட்ட அர்ப்பண வாழ்வை வாழ்ந்து காட்ட இயேசு நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதத்தில் அழைத்திருக்கிறார் என்பதை உணர்கிறோம். அர்ப்பண வாழ்வைத் தேர்ந்து கொண்ட நாம் இந்த உலகத்தின் மத்தியில் உலகத்தின் துணையோடு இயேசுவை வெளிப்படுத்த அழைக்கப்பட்டிருகின்றோம். இயேசு எவ்வாறு தந்தை தன் வாழ்வை வழி நடத்த வேண்டுமென்று தன்னை முழு மனதுடன் அர்ப்பணித்தாரோ அது போல நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவால் நாம் வழிநடத்தப்பட வேண்டுமென்று நம்மை முழுமனதுடன் அர்ப்பணிக்க இயேசு தன்

அப்போஸ்தலர்களைப் பார்த்துக் கூறியதுபோல நம்மையும் பார்த்துக் கூறுகிறார். 'நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன் நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்'' (யோவான் 15:16)

இந்த சபை ஒழுங்குகள் வெறும் சட்ட திட்டங்களை வெளிப்படுத்தும் புத்தகம் மட்டுமல்ல மாறாக இயேசுவின் மன உணர்வுகளை நம் உள்ளத்தில் பதிய வைக்கும் ஆற்றல் கொண்டது. நமது அழைப்பை ஏற்று இயேசுவோடு இணைந்து வாழ வேண்டுமென்று நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உரைக்கின்றார். இயேசுவின் அழைப்பை ஏற்று இந்த உலகிற்கு இயேசுவின் பிரசன்னத்தை வெளிப்படுத்துபவர்களாகவும், இயேசுவின் அன்பையும், இரக்கத்தையும் நம் வாழ்வின் மூலம் பகிர்ந்தளிக்கும் சாட்சிகளாக வாழவும், நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர வேண்டும்.

நமது சபை ஒழுங்குகள் திரு அவையின் சொத்தாகும். திருத்தந்தையின் அனுமதிபெற்ற ஒரு நிறுவனமாகும். (Institute as an Institute of Pontifical Right) இயேசுவோடு உண்மையான உறவு கொண்டுள்ளவர்களாகவும், ஆவியானவரின் உள்ளுணர்வுகளுக்குச் செவிமடுப்பவர்களாகவும், எப்போதும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றும் உள்ளம் கொண்டவர்களாகவும், அப்போஸ்தலிக்க ஆர்வத்தோடு எப்போதும் இவ்வுலகில் செயலாற்றுபவர்களாகவும் வாழ இச்சபை ஒழுங்குகள் நமக்குத் துணை நிற்கவேண்டும்.

இச்சபை ஒழுங்குகளின் மீது அக்கறையில்லாத தன்மையானது, நமது துறவறவாழ்வின் மீது நாம் கொண்டுள்ள பிடிப்பற்ற தன்மையையும், ஆன்மீக வாழ்வில் நாம் கொண்டுள்ள அக்கறையின்மையையும், அழைத்தல் வாழ்வில் நமது ஈடுபாடற்ற தன்மையையும், ஆன்மவாழ்வின் முன்னேற்றத்தின் தடையையும், அன்பற்ற நம் இதயத்தையும், பிறருக்குப் பணிபுரியாத வாழ்வையும் வெளிப்படுத்தும் எச்சரிக்கையாகக் கருத வேண்டும். எனவே நமது சபை ஒழுங்குகள் நம் வாழ்வின் சட்டப் புத்தகம் என்பதை நம் மனதில் நிலை நிறுத்த வேண்டும்.

நம் சபை ஒழுங்குகளானது நம் அன்னைமரியாவின் துணையோடும், தூய ஆவியானவரின் வல்லமை மிக்க தூண்டுதலோடும் கடவுளின் திட்டத்தை தெளிவாகக் கண்டு உணர்ந்து அதை நமது வாழ்வாக்க கடவுள் நமக்குத் தரும் தெளிவான நெறிமுறை என கண்டு கொள்ள நமக்குத் துணை புரிகின்றது. நமது வாழ்வின் தெளிவற்ற, குழப்பமான சூழல்களில் எப்படி எதிர் கொள்ள வேண்டும் என்பதை

தெளிவாக உணர்த்தும் ஒரு வழி காட்டி. எனவே திருவிவிலியத்தோடு நம் சபை ஒழுங்கு நூலும் நம் கைகளில் எப்போதும் இருக்க வேண்டும்.

நமது சபை இரண்டு வகையான உறுப்பினர்களைக் கொண்டது. முதல் வகையினர் வார்த்தைப்பாடுகள் வழியாக இந்தச் சபையில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள். மற்றொரு வகையினர் அர்ப்பண உணர்வோடு குடும்ப வாழ்வில் வாழ்வோர் தங்களை நம் சபையில் இணைத்துக் கொண்ட இணை உறுப்பினர்கள். நாமனைவரும் இணைந்து தூய ஆவியானவரின் வல்லமையோடு இணைந்து, நம் சபை ஒழுங்குகளின் துணையோடு நம் ஆன்மீக வாழ்வை வலுப்படுத்திக் கொள்வோம். நம் அனைவரின் தனிவரம் 'இறைத் திருவுளச்சபையின்' ஆன்மீக வாழ்வை நமதாக்கி அர்ப்பண உணர்வுடன் வாழ்வது. அப்போதுதான் நம் வாழ்வின் இறுதியில் நம் ஆண்டவர் இயேசு நம் ஒவ்வொருவரையும் நோக்கி வாருங்கள் என் தந்தையின் ஆசிபெற்ற மக்களே என வரவேற்பார்.

மங்கள வார்த்தை நாளன்று நம் அன்னை தூய கன்னிமரியாள் கபிரியேல் வானதூதர் வழியாகக் கொண்டுவந்த செய்தியைத் தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டார். நாம் ஒவ்வொருவரும் நம் இதயங்களைத் திறந்து இலவசமாகக் கடவுள் தரும் வார்த்தையை நம் இதயத்தில் எற்று அதை வாழ்வாக்குவோம். தேவ வார்த்தை சபை உறுப்பினர்களாகிய நமக்கு நம் அன்புத் தாய் அன்னை மரியாவைத் தவிர வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை. வியாகுல அன்னை மரியாளைப் போல நாமும் நமது வாழ்வின் இக்கட்டான சூழ்நிலைகளிலும் ஆண்டவர் இயேசுவை நம் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் பின்பற்றுவோம். அன்னை மரியாவைப் போல நாமும் இயேசுவின் சிலுவை அடியில் நின்று மீட்புப் பலியில் பங்கெடுத்தது போல, நமது இக்கட்டான வாழ்வின் சூழ்நிலைகளிலும் இயேசுவின் சாட்சிகளாக வாழ்வோம்.

கடவுள் நம்மை புனிதத்துவத்தின் நிலைக்கு உயர்த்த விரும்புகிறார். நம் சபை ஒழுங்குகளை தியானிப்பதின் மூலம் இந்நிலையை நாம் அடைய முடியும் என நம்புகின்றோம். இயேசு நம் மீது கொண்டுள்ள இத்தகைய அசைக்கமுடியாத விருப்பத்தை நினைத்துப் பார்க்கும் போது நமக்கு வியப்பாகத் தோன்றவில்லையா?

லூயி மரிய பாரன்ட் OMI
1988, டிசம்பர் 25

# பகுதி – 1

# இறைத் திருவுளச்சபை

# இயல் - I :
# இயல்பு, தனிவரம், சபையின் நோக்கம்

1. இறைத் திருவுளச்சபையானது திருத்தந்தையின் அனுமதி பெற்ற உலகியல் துறவற சபை ஆகும். இதன் உறுப்பினர்கள் குருக்களாயினும், பொது நிலையினராயினும் கடவுளின் திருவுளத்தைக் கண்டு உணர்ந்து, வாழ்ந்து மகிழ்ந்து, அவற்றில் நிறைவுகாண ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றோம். இச்சபை தன் உறுப்பினர்களை ஒரு பொதுவான அப்போஸ்தலிக்க செயல்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பணிக்கின்றது. உலகில் எந்த நிலையில் இருந்தாலும் அர்ப்பண உணர்வோடு வாழ்ந்து, அவர்களது வாழ்வில் கடவுளின் இறையரசு மலரவும், மேலும் அவர்களைச் சுற்றி வாழும் அனைவரிலும், மேலும் இயேசு எங்கெல்லாம் விரும்புகிறாரோ அங்கெல்லாம் இறையரசு மலர உழைக்கவும் அழைக்கப்படுகிறார்கள். இச்சபை இல்லற வாழ்வில் இணைந்த உள்ளங்களையும் தங்களது இணை உறுப்பினர்களாக இணைத்துக் கொள்கிறது. இவர்களும் இச்சபையின் குருக்களைப் போல, தங்களின் வாழ்வு நிலைக்கேற்ப தங்களை முழுமனதோடு அர்ப்பணித்து மற்ற உறுப்பினர்களைப் போல அதே இலட்சியத்தோடு. அப்போஸ்தலிக்கச் செயல்பாட்டிற்கு அழைக்கப்படுகிறார்கள்.
2. இறைத் திருவுளச்சபையின் தனிவரங்கள் பின்வருவன. மங்கள வார்த்தை அன்னையைப் போல, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிய இயேசுவின் கருவியாக வாழ்வது. இன்றைய உலகின் மத்தியில், இன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப, இயேசு எங்கெங்கே செயலாற்ற விரும்புகிறாரோ அங்கே செயல்படுவது.
3. தந்தையின் திருவுளத்தை, தான் செய்பவை அனைத்திலும் நிறைவேற்ற இம்மண்ணுக்கு வந்த இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி வாழ இறைத் திருவுளச்சபை உறுப்பினர் ஒவ்வொருவரும், இச்சபையில் தங்களை இணைத்துக் கொள்கின்றனர். இச்சபை உறுப்பினர்களின் தலையாய கடமை என்னவென்றால், இறை வார்த்தை, அன்றாட நிகழ்வுகள் மற்றும் சட்டத்திற்குட்பட்ட அதிகாரிகள் வழியாக வெளிப்படுத்தப்படும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதே ஆகும். தூய ஆவியானவர் ஒருவர் மட்டுமே தனது வல்லமை மிக்க ஆற்றலால் உறுப்பினர் ஒவ்வொருவரின் உள்ளத்திலும்

தூண்டியெழுப்பி கடவுளின் திருவுளத்திற்குத் தங்களை முழுமனதுடன் அர்ப்பணிக்கவும், திருவுளத்தை நிறைவேற்றத் தயாராக இருக்கவும் வேண்டிய அருளையும் ஆற்றலையும் தருகின்றார். இத்தகைய ஆவியின் செயலைக் கண்டு கொள்ள உறுப்பினர்களுக்குச் சபை துணைபுரிவது மட்டும் தான் அதன் பணி என்பதை ஒவ்வொரு உறுப்பினரும் கண்டுணர வேண்டும்.

4. சபை உறுப்பினர் ஒவ்வொருவரும், நம் விசுவாசத்திற்கும், மறைத்தூது பணிக்கும், எடுத்துக்காட்டாக இருக்கும் நம் அன்னையும், ஆசிரியருமான மாசற்ற கன்னி மரியாளை நம் நினைவில் கொள்ள வேண்டும். இறைத் திருவுளத்திற்காக தன்னை முழுவதும் அர்ப்பணித்த அன்னை கன்னிமரியாளை ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் வாழ்வின் மாதிரியாகக் கண்டு கொள்ள வேண்டும். எனவே தான் இறைத் திருவுளச் சபை தங்கள் சபையின் பாதுகாவலர் திருவிழாவாக அகில உலகத் திருச்சபை கொண்டாடுகின்ற, வார்த்தை மனு உருவான, மங்கள வார்த்தைத் திருவிழாவை நம் சபையின் திருவிழாவாக நாம் கொண்டாடுகின்றோம்.

5. **இறைத் திருவுளச் சபையின் குறிக்கோள் :**

# மாசற்ற கன்னிமரி வழியாக இறைத் திருவுளம்

Voluntas Dei Per Mariam Immaculatan. (The will of God through Many Immaculate)

# இயல் - II :
# சபையின் ஆன்மீகம்

6. சபையின் ஆன்மீகமானது, திருச்சபையில் திருமுழுக்கு பெற்ற விசுவாசியின் ஆன்மீகத்தைப் போன்றது தான். அதாவது இயேசுவின் தோழமையோடும், ஆவியானவரின் வல்லமையின் துணையோடும், இறைத் தந்தையின் உறவில் வாழ்வது. கடவுளின் திருவுளத்திற்கேற்ப ஒவ்வொரு உறுப்பினரும் தங்களால் முடிந்த அளவு நம்பிக்கை, எதிர்நோக்கு, பிறரன்பு ஆகிய இறையியல் பண்புகளில் வளரவும் மேலும் இவ்வுலகப் பண்புகளான நீதி. விவேகம், வலிமை மற்றும் நிதானம். இவற்றில் ஆர்வமுடன் ஈடுபடவும் முயல வேண்டும். இத்தகைய பண்புகளில் நெறி பிறழாமல் வாழ்வது, நம் ஆன்மீகத்தை இழந்து விடாமல் தொடர்ந்து ஒரே சீராக வைத்துக் கொள்ள நமக்குத் துணை புரிவது மட்டுமல்ல, இவ்வுலகில் நாம் இயேசுவின் சாட்சிகளாக வாழவும் நம்மைப் பயிற்றுவிக்கிறது.

7. ஒரே சீரான வாழ்வுக்குச் சபை தன் உறுப்பினர்களுக்கு முன் வைப்பதாவது: நாம் செய்யும் அனைத்திலும் கடவுளின் திருவுளத்தை, நம் ஆண்டவராகிய இயேசுவைப் போலவும், அன்னை மரியாளைப் போலவும் நிறைவேற்றுவதில் தான் நமது ஆன்மீகம் அடங்கியிருக்கிறது. இது தான் மூன்று ஐந்து ஆன்மீகம் என அழைக்கப்படுகிறது.

   (1) ஐந்தில் முதலாவதாவது, சபை உறுப்பினர் ஒவ்வொரு வரும் நம் ஆண்டவர் இயேசுவோடு கொண்டிருக்கும் நெருங்கிய உள்ளார்ந்த உறவை, தினம் தோறும் செய்யும் செபத்தின் வழியாகவும், மேலும் பின்வரும் ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்வதின் வழியாகவும் இறை உறவை உயிரூட்டமாக வைத்துக் கொள்ள வேண்டும்

   - மனச் செபம், தியானம்
   - இறை வார்த்தையையும் மற்றும் ஆன்மீக வாழ்வைத் தூண்டக்கூடிய நூல்களையும் வாசித்தல்
   - நற்கருணைத் திருவிருந்துக் கொண்டாட்டத்தில் பங்கெடுப்பது.
   - நற்கருணை ஆண்டவரைச் சந்திப்பது.
   - அன்னை மரியாவின் மீது கொண்டுள்ள பக்தி. சிறப்பாக இப்பக்தியை வெளிப்படுத்தும் செபமாலைத் தியானத்தை, ஐந்து செபமாலைத் தியானத்தை செபிப்பது.

(2) இரண்டாவதாக, உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்கள் மனத்தை ஒருமுகப்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்துவது, மேலும் தாழ்ச்சி, பிறரண்புப் பண்புகளில் வளர பின்வரும் செயல்பாடுகளைச் செய்வது.

- **இறைப்பிரசன்னம்:** இறைப் பிரசன்னத்தில் எப்போதும் நிலைத்திருப்பது. மணிக்கு ஒரு முறையாவது இறைப் பிரசன்னத்தை நினைவு கூர்ந்து, இறைப் பிரசன்னத்தில் தொடர்ந்து வாழ முயற்சி எடுப்பது.
- **எதிர் மறை விமர்சனங்கள் இல்லாமல் வாழ்வது.** அதாவது உள்ளார்ந்த மற்றும் புற விமர்சனங்களைத் தவிர்ப்பது. பிறரைப் பற்றிய நேர்மறை எண்ணங்களையே வளர்த்து, அவர்களுள் வாழும் இயேசுவைக் கண்டு நல் உறவை வளர்த்துக் கொள்வது.
- **குறையில்லாமல் பார்த்துக் கொள்வது.** எப்போதும் குறைச் சொல்லுக்கு இடம் கொடுக்காமல், மாறாக திறந்த உள்ளத்தோடு எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசுவைக் கண்டு ஏற்றுக் கொள்வது.
- **பணி வாழ்வில் சிறந்து விளங்குதல்.** ஒவ்வொருவரும் தன் பொறுப்புணர்வை உணர்ந்து, தன்னுடைய தலைமைப் பணியாளர்கள் சொல்கின்ற பணிகளை திறந்த உள்ளத்தோடும், மனமகிழ்வோடும் எவ்வித முணுமுணுப்பின்றி செய்ய முன் வருவது.
- **அமைதியின் தூதுவர்களாக வாழ்வது.** ஒவ்வொரு உறுப்பினரும் முடிவில் தங்கள் உள்ளத்தில் அமைதியை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் நற்செய்தி மதிப்பீகளான, நீதி, அன்பு, ஒப்புரவு போன்ற பண்புகளை இவ்வுலகில் நிலை நாட்டும் கருவிகளாக வாழ வேண்டும்.

(3) **மூன்றாவதாக** : சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் செயல்படுத்தக்கூடிய ஐந்து செயல்களைத் தவறாமல் செய்து இத்தகைய பிறரன்புப் பணிகள் மூலம் பிறரோடு கொண்டிருக்கும் நேர்மறையான உறவுகளை இயேசுவைப் போல வளர்ப்பது.

8. இறைவனோடும், பிறரோடும் நாம் கொண்டுள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்ள, சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் பிறரோடு இணைந்து செபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். சிறப்பாகத் தங்கள் குழு உறுப்பினர்களோடு இணைந்து செபிக்கும் பழக்கத்தை வளர்க்கும் தருணங்களை, உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதே நோக்கத்திற்காக ஒப்புரவு அருட்சாதனத்தில் அடிக்கடி பங்கு கொண்டு இறை உறவையும், பிறரன்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

9. இன்றைய உலகின் மத்தியில் மறைப் பணிக்காகத் தங்களையே அர்ப்பணித்துக் கொண்ட சபையின் உறுப்பினர்கள், தங்கள் இலக்கை மறந்து விடாமல் இருக்க தவறாமல் செபிப்பதும், தங்களையே புதுப்பித்துக் கொள்வதும் மிகத் தேவையானது என்பதை தங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே மாதாந்திர தியானமும், வருடாந்திர தியானமும் இதற்கு துணை புரிகிறது என்பதை நன்கு உணர வேண்டும்.
10. ஒரு வேளை சூழ்நிலையின் காரணமாக இத்தகைய ஆன்மீக பயிற்சிகளை மேற்கொள்ள வாய்ப்பில்லையென்றால், இதற்கு ஈடாக வேறு ஆன்மீகப் பயிற்சிகளை மேற் கொள்ள முன் வரவேண்டும். எதுவாக இருந்தாலும் தினந்தோறும் செய்யும் செபத்தியானத்தை கைவிடக்கூடாது, ஒருவேளை அவர்களது அப்போஸ்தலப்பணி இடம் தரும் என்றால் இந்தத் தனிப்பட்ட தியான நேரத்தை அதிகரிக்க முன்வர வேண்டும்.
11. சபையின் ஆன்மீகத்தை ஒவ்வொரு உறுப்பினரும், கடைப்பிடிக்கிறார்களா. இல்லையா என்பதைக் கண்டுணர அடிக்கடி சுய ஆத்ம சோதனை செய்து கொள்ள வேண்டும். ஆன்மீக ஆலோசகரிடம் சிறந்த உள்ளத்தோடு பகிர்ந்து, தவறுகளைக் களைந்து நேரிய வழியில் வாழ முன்வர வேண்டும்.

## இயல் - III :
## சபையின் அப்போஸ்தலிக்க நோக்கம்

12. இறைத் திருவுளச் சபை உறுப்பினர்கள் ஒவ்வொரு வரும் எல்லாச் சூழலிலும் செயல்பட வேண்டும். அவர்களுடைய அப்போஸ்தலிக்க பணி என்னவென்றால் ‘கிறிஸ்துவுக்குள் அமைதியான, சகோதரத்துவத்தை உருவாக்குவது’’. அகில உலகத் திரு அவையின் மறைப்பணி என்னவென்றால், அகில உலகில் வாழும் அனைத்துலக மக்கள் மீது கிறிஸ்துவழியாக வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் அன்பை பறை சாற்றுவதுதான் முக்கியமான பணி. இந்தப் பணியில் பங்கு பெறுவதுதான் நம் சபையின் பணியும் ஆகும்.

13. இதுதான் நமது சபையின் சிறப்பான மறைப் பணியாகும். இதுதான் நமது சபையின் அடிப்படை நோக்கமும் ஆகும். நமது சபை தொடங்குவதற்கு முக்கிய காரணம் இதுதான் என்பதை இறையருள் உணர்த்துகிறது.

14. இந்த நோக்கம் தான் ஒரு நல்ல உறவு வாழ்க்கையை வாழ நம்மைப் பணிக்கின்றது. இந்த நோக்கம் தான் நாம் பிறரோடு கொண்டுள்ள நட்புறவில் கிறிஸ்துவைக் காணவும், சிறப்பாக ஏழை எளிய துன்புறும் மக்களிடம் நம் அன்பைப் பகிர்ந்து, அன்புச் சமூகத்தைச் சுட்டியெழுப்ப ஒவ்வொரு உறுப்பினரும் அழைக்கப்படுகிறார்கள்.

15. இத்தகைய அமைதியையும், சகோதரத்துவத்தையும் நிலை நாட்ட, சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குழுவாக இணைந்து, குழுவின் ஒற்றுமை உணர்வை பிறரோடு பகிர்ந்து கொள்வதுதான் நம் சபையின் முக்கியமான அப்போஸ்தலப் பணியாகும்.

## இயல் - IV :
## சபையின் உறுப்பினர்கள்

16. சபையின் உறுப்பினர்கள், திருஅவைக்குக் கடவுள் தந்த மாபெரும் கொடையாகும். எனவே உறுப்பினர்களை கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட

மக்களாக வரவேற்கிறோம். திருமுழுக்குப் பெற்றவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி, திருஅவைக்குப் பணியாற்ற நமது சபையின் ஆன்மீகத்தாலும், அப்போஸ்தலிக்கப் பணியினாலும் கவர்ந்திழுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சபையைத் தொடங்கியவர்கள், இச்சபைக்குக் கொடுத்த தனிவரம் என்னவென்றால், உலகியல் ஆன்மீகத்தை மையமாகக் கொண்டது. உலகில் வாழுகின்ற ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் எந்த நிலையில் இருந்தாலும், நிலை வாழ்வைக் கண்டு கொள்ள இத்தகைய ஆன்மீகம் அவர்களுக்குத் துணைபுரிகின்றது.

17. இறைத் திருவுளச் சபை ஏற்றுக் கொள்ளும் உறுப்பினர்கள்.

(1) திரு அவையின் சட்டப்படி குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்ட யாராக இருந்தாலும் அல்லது குருத்துவ பயிற்சி நிலையில் உள்ள யாராக இருந்தாலும்

- திரு அவையில் இயேசுவின் மறைப் பணியில் இணைந்து பணியாற்ற விருப்பமுள்ளவர்கள்.
- நற்செய்தி மதிப்பீடுகளை ஏற்று அதன்படி வாழ விருப்பமுள்ளவர்கள்.
- சகோதர உறவுடன் மேலும் சபையின் குழுவோடு இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள். ஏதாவதொரு மறைமாவட்டத்தோடு அல்லது துறவற நிறுவனத்தோடு தங்களை இணைத்துக் கொண்ட குருக்களும் நம் சபையில் இணைந்து பணியாற்ற விரும்பினால் அவர்களை ஏற்றுக் கொள்ளலாம் (Art. 87)

(2) திருமணமாகாத இளைஞர்கள், இறையாட்சிக்காக மணத் துறவு மேற்கொண்டு. தங்களையே முழுவதும் அர்ப்பணித்து, திரு அவையிலும், உலகத்திலும் இயேசுக்கிறிஸ்துவின் இறையாட்சிப் பணியை மேற் கொள்ள விருப்பமுள்ளவர்கள்.

- நற்செய்தி மதிப்பீடுகளை தங்கள் வாழ்வில் பறைசாற்றவும் அதன்படி வாழவும் விருப்பமுள்ளவர்கள்
- நம் சபையின் குழு வாழ்க்கையைப் பகிர்ந்து வாழ விருப்பமுள்ளவர்கள்
- திருமணமாகி மனைவியை இழந்தவர்கள், எல்லாவிதமான இல்லறக் கடமைகளிலிருந்து விடுபட்டவர்கள், எந்தவிதமான சார்பும் இல்லாதவர்கள், விரும்பினால் நம் சபையில் இணைத்துக் கொள்ளப்படலாம்.

18. நமது சபை இணை உறுப்பினர்களாக திருமணமானவர்களையும் ஏற்றுக் கொள்கிறது. திருமணம் என்னும் அருட்சாதனத்தால் இணைக்கப்பட்ட கணவனோ, மனைவியோ நம் சபையில் இணைய விருப்பமென்றால்

- குருவும், இறைவாக்கினரும், அரசருமான இயேசுக் கிறிஸ்துவுக்குத் தங்களையே முழுவதும் அர்ப்பணித்து, அவருடைய பணியை இந்த திரு அவையிலும், அகில உலகிலும் நிறைவேற்ற முன் வரவேண்டும்.
- அவர்களுடைய வாழ்க்கை நிலைக்கேற்றவாறு நற்செய்தி மதிப்பீடுகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.
- சபையின் குழு வாழ்க்கையோடு இணைந்து செயலாற்ற வேண்டும்.
- திருமணமான நபர்கள் என்றால் நமது சபையின் சட்ட திட்டத்தின்படி திருமணமான கணவன் மனைவி ஆகிய இருவரையும் குறிக்கின்றது. சமூகச் சூழல்களின் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது சிறப்பான நிகழ்வுகளின் காரணமாகவோ இருவரும் இணைந்து பணியாற்ற முடியவில்லை என்றாலொழிய மற்ற எல்லா வேளையிலும் இருவருமே இணைந்து பணியாற்ற முன் வர வேண்டும்.
- தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் தகுந்த காரணங்கள் இருந்தால், மாநில இயக்குநர், சபையின் இயக்குநர் (Director General) மற்றும் அவரது ஆலோசகர்களின் முன் அனுமதி பெற்று, கணவனரை மட்டும் சபையில் இணைந்து பணியாற்ற அனுமதிக்கலாம்.
- நம் சபையில் தங்களையே இணைத்துக் கொண்ட திருமணமான தம்பதியினர் இருவருள் ஒருவர் இறந்து விட்டால் மற்றவர் மறு திருமணம் செய்யும் வரை நம் சபையில் இணைந்து பணியாற்றலாம். அதற்கு எந்தத் தடையுமில்லை.

19. நம் சபையில் தங்களையே இணைத்துக் கொண்ட உறுப்பினர்களின் நிலையையும், கடமைகளையும் மிகத் தெளிவாக, பகுதி இரண்டில் உறுப்பினர்களைப் பற்றியும், பகுதி மூன்றில் இணை உறுப்பினர்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**இயல் - V : சபை உறுப்பினர்களுக்கான பயிற்சி :**

20. நம் சபை, முதலில் சேர விருப்பமுள்ளவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியைத் தருகிறது. அதன் பின்பு கிறிஸ்துவ வாழ்வில், சந்திக்கக்கூடிய சவால்களை பொறுப்புணர்வோடு எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய பயிற்சி அளிக்கப்படுகின்றது. சிறப்பாகச்சபை, குருக்கள், தனிமனிதர், இணை

உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் நிலைக்கு ஏற்ப தகுந்த பயிற்சிகளைப் பெறுகிறார்களா? என்பதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

21. **பொதுவான விதிகள் : (General Proviscons) :**

இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி பயிற்சி கால பொறுப்பாளரை நியமிக்கிறார். அவருடைய கடமை என்னவென்றால், ஒவ்வொரு பயிற்சி காலத்திற்கும் தேவையான பயிற்சி முறைகளை, காலத்தின் தேவைக்கேற்ப புதுப்பித்துத் தருவதாகும். மேலும் பயிற்சிப் பொறுப்பாளர், நிரந்தரப் பயிற்சிக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரிப்பதும், மேலும் அனைத்து மாநிலங்களுக்கிடையே ஒரே சீரான நடைமுறைச் செயல்பாடுகள் இருப்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

22. மாநில இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ, மாநில பயிற்சி ஒருங்கிணைப்பாளராக நியமிப்பார். அவர் பயிற்சியின் பல்வேறு நிலைகளில் ஒருங்கிணைந்த பயிற்சி அளிக்கப்படுவதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

23. பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் அவர்களுடைய பொறுப்பில் உள்ள பயிற்சி பெறுபவர்களைத் தவறாமல் சந்திக்க வேண்டும். இத்தகைய சந்திப்புக்களில் உறுப்பினர்கள் தங்கள் அழைத்தல் அனுபவங்களையும், மற்ற உறுப்பினர்களோடு கொண்டிருக்கும் நட்பையும். அவர்களுடைய பணிவாழ்வையும் பகிர்ந்து அர்ப்பண வாழ்வின் பொருளை மிகத் தெளிவாகக் கண்டுணர வேண்டும். மேலும் அவர்களுடைய அழைத்தல் வாழ்வுக்குப் பயன்தரக் கூடிய வேறு ஏதாவது பொருளைப் பற்றியோ பகிர்ந்து பலன் பெற முன்வர வேண்டும். அதே வேளையில் பயிற்சி பெறுபவர்கள் தங்கள் அழைத்தல் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ள பயிற்சியாளர்கள் தருகின்ற அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் பணிவான உள்ளத்தோடு ஏற்று தங்கள் அழைத்தல் வாழ்வை ஆழப்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

24. பயிற்சியின் தொடக்க நிலையில் இருப்பவர்களுக்கு, மாநில இயக்குநர் அடிக்கடி பயிற்சிபெறுபவர்களைச் சந்தித்து. நம் சபையின் பயிற்சி வழிகாட்டு நெறிமுறைகளை மிகத் தெளிவாக விளக்கி அவர்களைத் தகுந்த முறையில் வழிநடத்த வேண்டும்.

25. பயிற்சிப் பொறுப்பாளர்கள் தங்களுடைய பொறுப்பில் இருக்கும் பயிற்சியாளர்கள் திறந்த மனத்தோடு, தீர்க்கமான உள்ளத்தோடு, ஆன்மீக வாழ்வாக இருந்தாலும் அல்லது பொதுவான வாழ்வாக இருந்தாலும் நல்லதொரு முடிவுகளை எடுக்கும் பழக்கத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் பல குழப்பங்கள் நிறைந்த இன்றைய கால கட்டத்தில் ஆன்மீக

வாழ்வாக இருந்தாலும் அல்லது பணி வாழ்வாக இருந்தாலும் தீர்க்கமான முடிவை எடுக்க இப்போதும் வருங்காலங்களிலும் அவர்களுக்குப் பெருந்துணையாக இருக்கும்.

26. சிறப்பாக தொடக்க நிலைப் பயிற்சியில் இருப்பவர்கள், வார்த்தைப்பாடுகள் எடுத்து பயிற்சி நிலையில் இருப்பவர்கள் மேல் மாநில பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் தனிக் கவனம் செலுத்தி, கற்றுக் கொள்பவற்றை சரியாகப் புரிந்து கொள்ளவும், புரிந்து கொள்வதைச் செயல்படுத்தவும் பயிற்சியாளர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும். தொடக்க நிலைப் பயிற்சியாளர்களை அல்லது மற்ற பயிற்சி நிலையில் இருப்பவர்கள் அடுத்த பயிற்சி நிலைக்குத் தெரிவு செய்யும் போது, பயிற்சியாளர்களைப் பற்றி பயிற்சி பொறுப்பாளர்கள் கொடுக்கின்ற பரிந்துரைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

27. சபையின் உறுப்பினர்கள் அனைவரும், திருஅவையின் பணிகள் அனைத்திலும் முடிந்த அளவு செயல் திறன் மிக்கவர்களாக வாழ முயல வேண்டும். எனவே உறுப்பினர்கள் தங்களால் முடிந்த அளவு தொழில் முறை பயிற்சிகளில் தேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அதே வேளையில் தங்கள் பணிவாழ்வுக்கு அடிப்படையும் ஆணிவேருமான கடவுள் மீது கொண்டுள்ள உறவுதான் என்பதையும் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

28. சபையின் குறிக் கோளையும். தனிப்பட்ட அழைப்பையும் ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் மனதில் ஆழமாகப் பதிய வைத்து, எப்போதும் ஆன்மீக அறிவிலும், உலகியல் அறிவிலும் தங்களால் முடிந்த அளவு முதிர்ச்சி காண முயல வேண்டும்.

29. மாநில இயக்குநர் இதை மனதில் கொண்டு கடினமான, சவால் நிறைந்த அப்போஸ்தலிக்கப் பணிக்குத் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அதற்குரிய சிறப்புப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள தகுந்த முயற்சிகளைக் கையாள வேண்டும்.

30. உறுப்பினர்களின் அப்போஸ்தலிக்கப் பணிவாழ்வுக்கு அடிப்படைத் தேவையான இறையனுபவத்தில் வேரூன்றி வளர்வதற்குத் தேவையான தனிப்பட்ட செப வாழ்விலும், காட்சித் தியானத்திலும் வளர்ச்சியடையத் தேவையான நேரங்களை ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் ஒதுக்கி இறை உறவில் வளர்கிறார்களா என்பதை அறிய மாநில இயக்குநர் ஒவ்வொருவரிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டும். எனவே அர்ப்பணவாழ்வில் நுழைந்த ஒவ்வொரு ஆறாம் ஆண்டின் தொடக்கத்தில் குறைந்தது இரண்டுமாதங்களாவது, தகுந்த இடத்தில்

தனித்திருந்து செபத்தில் ஈடுபட்டு தனது ஆன்மீக வாழ்வை ஆய்வு செய்து இறை உறவில் மேலும் வளர்ச்சிகாண வேண்டும்.

31. மாநில இயக்குநர் ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர்களின் தொடர் ஆன்மீகப் பயிற்சியில் தனிக்கவனம் செலுத்தி, செப சூழ்நிலையில், பயிற்சியில், தெளிவு பெற ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

32. **குறிப்பிட்ட ஏற்பாடுகள் (நெறிமுறைகள்) (தியாக்கோன் மற்றும் குருத்துவ நிலை பெறும் நபர்களுக்கு)** தியாக்கோன் மற்றும் குருக்களாக அருள் பொழிவு பெறப் போகிறவர்கள் தங்கள் அழைத்தல் வாழ்வையும், அருட்பணி வாழ்வையும் சிறப்பாக வாழத் தேவையான அனைத்துப் பயிற்சிகளையும் திருஅவையின் வழிகாட்டுதல் படியும், திருஅவை சட்ட வழிமுறைகளின் படியும், திரு அவைக் குழுக்களின் ஆவணங்களின் படியும் மற்றும் தலத் திரு அவையின் பழக்க வழக்கங்களின் படியும் நிறைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

33. தியாக்கோன் பட்டம் பெற்றவர்கள் நம் சபையின் நோக்கத்தின் படி தங்கள் குருத்துவப் பணி வாழ்வை நிறைவாக வாழ்வதற்கு வேண்டிய பயிற்சிகளை வழங்குவதில் மாநில இயக்குநர் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

34. தங்களை நம் சபையில் இணைத்துக் கொள்ள விருப்பமுள்ள தியாக்கோன்கள் மற்றும் குருத்துவ அருட்பொழிவு பெற இருப்பவர்களுக்கு, மாநில இயக்குநர் மற்றும் அவரது ஆலோசகர்கள் தங்கள் மாநில ஒழுங்கு நெறி முறைகளின் படி அவர்களுக்கு மேய்ப்புப் பணிப் பயிற்சிக்கு அனுப்ப வேண்டும். இந்த பயிற்சிக் கால அளவு அவ்வப்போது மாநில ஆலோசனைக் குழுவில் மதிப்பீடு செய்யப்பட்டு, தேவைக்கேற்ப அதிகப் படுத்தவோ, குறைக்கவோ செய்யலாம். இந்த மாநிலப் பரிந்துரைகளை மத்திய ஆலோசனைக் குழு ஆய்வு செய்து அனுமதியளிக்கு முன் அந்தந்த தலத் திருச்சபையின், நெறிமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

35. **இணை உறுப்பினர்களுக்காக:** பொது நிலையினர் சிறப்பான வழியில், இவ்வுலகில் இயேசுவுக்குச் சான்று பகரும் சாட்சியாளர்களாக வாழ அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் இறை நம்பிக்கையை, செப வாழ்வின் மூலமும், இறை வார்த்தையை அறிந்து ஏற்றுக் கொள்வதன் மூலமும் மற்றும் சபை வழங்குகின்ற ஆன்மீகப் பயிற்சிகள் மூலமாகவும் உயிரூட்டமாக வைத்துக் கொள்கிறார்கள்.

36. பொதுநிலையினருடைய தொழில் அல்லது வணிகம் தான் அவர்களுடைய அப்போஸ்தல பணி வாழ்வின் தளமாக இருப்பதால் தொழில் முறை திறன்களை வளர்த்துக் கொள்ள முன் வர வேண்டும்.

# இயல் - VI :
# சபையில் குழு வாழ்வு :

37. சபையின் உறுப்பினர்கள் அனைவரும் குழுவாக ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்பதால் தவறாமல் ஒன்று கூடி வர வேண்டும். இவ்வாறு ஒன்று கூடி வந்து இணைந்து வாழவும் இறை வார்த்தையைக் கேட்டுத் தியானிக்கவும் காலத்தின் அறிகுறிகளைக் கண்டு கொள்ளவும், கடவுளின் திருவுளத்தை தேர்ந்து தெளியவும் வேண்டும்.

38. குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஆன்மீக வாழ்வில், ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்பதற்கு குழுவாக ஒன்று கூடி வருவது பெருந் துணை புரிகிறது. எனவே எவ்வளவு பெரிய பணிகள் இருந்தாலும் ஒன்று கூடி வருவதைக் காரணங்கள் கூறி தடுக்கக் கூடாது. மாறாக குழுவாக ஒன்று கூடிவருவது தனிப்பட்ட ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தவும், சபையின் அப்போஸ்தல பணி வாழ்வைச் செவ்வனே முன்னெடுத்துச் செல்வதற்கும், குழுவாகக் கூடி வருவதும் இணைந்து செபித்து வாழ்வதும் மிகத் தேவையான ஒன்றாகும்.

39. குறிப்பிட்ட பகுதியில் உள்ள சபை உறுப்பினர்களும் அந்தப் பகுதியில் வாழ்கின்ற இணை உறுப்பினர்களும் இணைந்து குழுவாக வர வேண்டும். இவ்வாறு கூடி வரும் போது திரு அவையின் குடும்ப உறுப்பினர்கள் நாம் என்பதை உணர்ந்து, நட்புடனும், பாசத்துடனும் ஒருவரையொருவர் வரவேற்று, நம் சபை நமக்கு முன்வைக்கின்ற கூட்டுறவு வாழ்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். சபையின் உறுப்பினர்களும், இணை உறுப்பினர்களான தம்பதியினரும் அர்ப்பண உணர்வுடன் நமது அழைப்பின் அனுபவங்களையும், இந்த அழைத்தல் வாழ்வில் நாம் சந்தித்த சவால்களையும் ஒருவருக்கொருவர் பகிரும் போது, நாம் நம் அழைத்தல் வாழ்வில் உறுதி பெறுகிறோம். ஒருவருக்கொருவர் நல்ல முன் மாதிரியாக வாழ்கிறோம். (Art. 15)

40. குறைந்தது மூன்று பேர் ஒன்று கூடி ஒரு குழுவாக அமைத்துக் கொண்டு அவர்களுள் ஒருவரை வழிநடத்துநராகத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். இந்தக் குழுவானது பகுதி ஒருங்கிணைப்பாளரின் நேரடிக் கண்காணிப்பில் வழிநடத்தப்பட வேண்டும்.

41. குழு வழி நடத்துபவர் குழுவின் நன்மைக்கே முக்கியத்துவம் தந்து, நம் சபை எந்த நோக்கத்திற்காக இக்குழுக்களை அமைத்ததோ அதன் நோக்கம் நிறைவேறுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

42. குழுவை வழி நடத்துபவர் தனக்கு மேலுள்ள தகுந்த பொறுப்பாளர்களுக்குத் தன் குழுவைப் பற்றிய நிலையைப் பற்றியும் அது செயல்படுகின்ற விதம் பற்றியும் தொடர்ந்து பகிர வேண்டும்.

# பகுதி – 2

# சபையில் அர்ப்பண வாழ்வு

# இயல் - I :
# உலகு சார்ந்த அர்ப்பணிப்பு

43. உலகு சார்ந்த அர்ப்பணிப்பைச் செய்பவர்கள் இவ்வுலகின் மத்தியில் வாழ்கிறார்கள். இது கடவுள் அவர்களுக்குத் தரும் ஒரு மாபெரும் கொடையாகும். கடவுளின் குரலுக்குச் செவிமடுத்து, நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழ்ந்து, இவ்வுலகில் புளிக்காரம் போல வாழ அழைக்கப்பட்டிருகிறார்கள். இன்றைய உலக மதிப்பீடுகளின் மத்தியில் அர்ப்பண வாழ்வு வாழ்ந்து நற்செய்தி அறிவிப்புப் பணி தொடர்ந்து நடைபெற தங்களை அர்ப்பணிக்கின்றார்கள். மனுக்குலம் அனைத்தும் திருமுழுக்கு அருளினால் நிரப்பப்பட்டு இயல்பாகவே தெய்வீக வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளது. நமது சபையில் அர்ப்பணம் என்பது சிறப்பாக குருக்களுக்கும், திருமணமாகாத தனிஒரு மனிதனுக்கும் இறையருளை வாரி வழங்கும் என்பதை உணரவேண்டும். மேலும் தங்களையே சிறப்பான விதத்தில் முழுவதும் கடவுளுக்கு அர்ப்பணித்து, நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழ வழிகாட்டுகிறது. சபை உறுப்பினர்கள்

கடவுளுக்குத் தங்களையே முழுமையாக அர்ப்பணித்து, இயேசுவை முழுவதுமாகப் பின்பற்றி, அர்த்தமுள்ள வாழ்வு (ஆராதணைக்குரிய) வாழ்வதற்கும், முழு அர்ப்பண வாழ்வு வாழ்வதற்கும், பணி வாழ்வு வாழ்வதற்கும் தங்களையே முழுவதும் ஒப்புக் கொடுக்கின்றார்கள்.

44. இறைத் திருவுளச் சபையில் இத்தகைய வாழ்வு வாழ்வதற்காக :

(1) குருக்கள், திரு அவையின் விருப்பத்திற்கு ஏற்ப தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணி எதுவாக இருந்தாலும், மறைப் பணியாளர்களாக பணிபுரிய விருப்ப முள்ளவர்கள் வார்த்தைப்பாடுகள் வழியாக, நற்செய்தி மதிப்பீடுகள் வாழ்வு வாழ்ந்து இயேசுவைப் பின்பற்ற வருகிறார்கள்.

(2) தனியொருவர் தான் சார்ந்த ஒரு துறையில் செய்து வருகின்ற மகத்தான பணி வழியாகச் செய்துவரும் அப்போஸ்தலிக்க சாட்சிய வாழ்வும், பணி வாழ்வும் மேலும் மேம்பட, நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழ, கிறிஸ்துவைப் பின்பற்ற அர்ப்பணத்தை மேற்கொள்கிறார்கள்.

**கீழ்ப்படிதல்:**

45. கீழ்படிதல் வாழ்வு தான் இறைத் திருவுளச்சபை உறுப்பினர்களின் குறிப்பிட்ட அடையாளமாகும். சபை அதிகாரிகளிடமிருந்து பெறுகின்ற பணிகளை பொறுப்பான முறையில் செவிமடுத்துச் செயலாற்றவும், இதன் வழியாக கடவுளின் திருவுளத்தை தங்கள் வாழ்வு முழுவதும் நிறைவேற்றுவதே நம் வாழ்வாக இருக்க வேண்டும்.

தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதே இயேசுவின் மேலான இன்பமாக இருந்தது போல, சபை உறுப்பினர்கள் அனைவரும், திரு அவை மற்றும் நமது சபை நமக்குக் கொடுக்கின்ற அனைத்துப் பணிகளையும், புரிந்து, தாரள உள்ளத்துடன், ஈடுபாட்டுடன், தங்களால் முடிந்த அளவு செய்து முடிக்க முன்வரும்போது, நாம் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுகிறோம் என்பதைக் கண்டு கொள்ளலாம்.

இதே மன நிலையில் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு மேலுள்ள பொறுப்பாளர்களிடம், திறந்த மனதுடன், கடவுளின் திருவுளம் தங்களுக்கு எதுவென வெளிப்படுத்தப்பட்டதையும், தங்களுடைய விருப்பங்களையும், அதை செயல் படுத்துவதில் சந்திக்கும் சவால்களையும், தடைகளையும் வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இறுதியில் தனது பொறுப்பாளர் கூறுகின்ற அறிவுரைகளுக்கும், கட்டளைகளுக்கும் எவ்வித முணுமுணுப்பும்,

எதிர்மறை கேள்விகளும் கேட்காமல் பொறுமையுடன் பணிந்து ஏற்று வாழ முன் வர வேண்டும்.

46. கீழ்படிதல் என்னும் வார்த்தைப்பாட்டின் மூலம் சபையின் மேலதிகாரிகள் தமக்கு இடுகின்ற கட்டளைகளை, பணி வாழ்வை, நம் சபையின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, எவ்வித எதிர்ப்பும் இன்றி செய்ய வேண்டும். மேலும் உறுப்பினர்கள் பின்வருவனவற்றிற்கும் பணிய வேண்டும்.

- உறுப்பினர்களுடைய குணநலன்கள் மற்றும் அவர்களுடைய சாட்சிய வாழ்வு பற்றிய மதிப்பீடுகளைப் பொறுமையுடனும், அமைந்த உள்ளத்துடனும் ஏற்று, குறைகளைக் களைந்து நிறைவாழ்வு வாழ வேண்டும்.
- சபையின் சட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் தொய்வு இருப்பதை மேலதிகாரிகள் சுட்டிக்காட்டி நம்மை நேரிய வழியில் இட்டுச் செல்ல முயலும் போது அவர்களுக்குப் பணிந்து அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும்.
- தங்களுடைய தனிப்பட்ட பணி வாழ்வின் முன்னேற்றத்திற்காக மேலதிகாரிகள் தரும் அறிவுரைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் செவிசாய்த்து அவற்றை செயல்படுத்த முன் வரவேண்டும்.

47. எல்லா நிலைகளிலும், சிறப்பாக வார்த்தைப் பாடுகளைக் கடைப்பிடிப்பதிலும், சபை ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதிலும் பொறுப்பான மேலதிகாரிகள் தருகின்ற கட்டளைகள் சிறப்பாக கிறிஸ்துவின் பெயரால் தரப்படுகின்ற எழுத்துப்பூர்வமான கட்டளைகளுக்கு முழுமனதுடன் எவ்வித எதிர்ப்பும் இன்றி நிறைவேற்ற வேண்டும். இல்லையென்றால் அது பெரிய தவறாகும்.

48. உறுப்பினர்கள் கடவுளின் திருவுளத்தைத் தங்கள் அன்றாட வாழ்வில் ஏற்று வாழ்வதில் மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். நம் சபை வழியாக திரு அவை நமக்குவிடுக்கும் பணிகளை மேற்கொள்ளும் போது சந்திக்கும் தாழ்ச்சி, மகிழ்ச்சி, விரைவாகச் செயல்படுவதில் சந்திக்கும் சவால்கள் அனைத்தையும் ஏற்றுச் செயலாற்ற முன்வர வேண்டும்.

49. உறுப்பினர் ஒவ்வொருவரும் சபையின் சட்ட திட்டங்கள் மற்றும் நடைமுறை ஒழுங்குகள் மேலும் அந்தந்த மாநிலத்திற்கேயுரிய சிறப்பு ஒழுங்குகள் இவற்றை உள்ளத்தில் இருத்தி முழு மனதுடன் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு கடைப்பிடிப்பதன் மூலம் கடவுளின் திருவுளத்தை வெளி அடையாள முறையில் நிறைவேற்றுகிறோம்.ள மேலும் இதன் மூலம் நமது தனிப்பட்ட புனிதத்துவத்திற்கும், திரு அவையில் அப்போஸ்தலப் பணி நிறைவேறுவதற்கும் நாம் நமது பங்களிப்பைத் தருகிறோம் என்பதை தெளிவாக உணரவேண்டும்.

50. சபையின் உறுப்பினர் அனைவரும் திருதந்தையின் மீது தனிப்பட்ட விதத்தில் மதிப்பும், மரியாதையும், அன்பும் கொண்டிருப்பது மட்டுமன்றி, இறை மக்கள் அனைவரும் திருத்தந்தைக்கு மதிப்பும் மரியாதையும் தந்து அவருடைய கட்டளைகளுக்குத் திறந்த உள்ளத்துடனும், தளராத மனத்துடனும் செவிமடுத்துச் செயல்படுத்த வேண்டும். இவ்வாறே நமது சபையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தலத்திரு அவையின் தலைவர்களான ஆயர்களுக்கும் பணிந்து வாழ கடமைப்பட்டிருக்கின்றோம்.

51. தலத்திரு அவையில் நாம் செய்கின்ற பணிகளில் தலத் திரு அவையின் வழி காட்டுதல்களுக்கும், நெறி முறைகளுக்கும் ஏற்ப பணிந்து நிறைவேற்ற வேண்டும். முடிந்த அளவு தலத் திருஅவைத் தலைவர்களோடு மாநில இயக்குநர் பணிகளைப் பொருத்த அளவில் ஒப்பந்தங்களை தெளிவாக வகுத்துக் கொள்வது சிறந்தது.

52. ஒழுங்கு நடைமுறைகளைப் பொருத்த அளவில் சபையின் சட்ட திட்டங்கள், ஒழுங்குகள் இவற்றிலிருந்து தற்காலிக விலக்கு அளிக்கலாம்.

    (1) சபையின் இயக்குநர், சபை முழுவதற்கும் அளிக்கலாம் அல்லது அந்தந்த மாநில இயக்குநர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் சமயத்தில் அனுமதி கொடுக்கலாம்.

    (2) மாநில இயக்குநர் தகுந்த காரணங்களுக்காக ஒரு குழுவுக்கே விதி விலக்கு அளிக்க நேரிட்டால் உடனடியாக இச்செய்தியை சபையின் இயக்குநர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**ஏழ்மை:**

53. கிறிஸ்து ஏழையர்க்கு மீது தனிப்பட்ட முன்னுரிமை அளித்தார் அதுமட்டுமன்றி ஏழையாகவே வாழ்ந்தார். எனவே தான் இயேசுவைப் பின்பற்றுகின்ற நம் சபை உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் வாழ்வில் பொறுத்தமான அளவுக்கு ஏழைகளாகவும், பகிர்வு வாழ்விலும் எடுத்துக்காட்டான வாழ்வு வாழ வேண்டும்

54. ஏழ்மை வார்த்தைப்பாட்டை எடுக்கின்ற நாம் இவ்வுலகில் பல்வேறு செல்வங்கள் மத்தியில் வாழ்ந்தாலும் அவற்றிற்கு அடிமையாகி விடாமல் சாட்சிய வாழ்வு வாழ முன் வரவேண்டும். மக்களுக்குப் பணிபுரிய எப்போதும் தயாராக இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் பின்வருபவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

- கடவுளின் மீது நம்பிக்கை கொண்டு வாழும் வாழ்க்கையை எளிமையாக, திறந்த உள்ளத்தோடு பிறருக்காக வாழ்பவர்களாக வாழ வேண்டும்.
- அவரவர் வாழ்வுக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்ள உழைப்பது.

- நம் சபையின், பொது மற்றும் மாநில அமைப்புகளின் வழிகாட்டுதல் படி, மறைபரப்பு பணிவாழ்விற்கும் மற்றும் பல்வேறு மக்கள் நலப் பணிகளுக்கும் தேவையான பண உதவிகளை வழங்குவது
- சிறப்பாக நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு நம் அன்பையும் ஆதரவையும் அளிப்பது.

இவையனைத்தும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தங்களது தனிப்பட்ட ஏழ்மை வார்த்தைப் பாட்டிற்கு மிக அவசியத் தேவை என்பதை மனதில் நிலை நிறுத்த வேண்டும்.

55. ஏழ்மை வார்த்தைப்பாட்டைப் பொறுத்த அளவில் உறுப்பினர்கள் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை மிகக்கவனத்துடன் சபையின் ஒழுங்குகளுக்கு ஏற்ப பயன்படுத்தவும் பிறருக்கு பகிர்ந்தளிக்கவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சபையில் நுழையும் போது ஏழ்மை வார்த்தைப்பாட்டைப் பொருத்த அளவில் தங்களது நிலைப்பாடு என்ன என்பதை மாநில இயக்குநருடன் பகிர்ந்து அவரது அனுமதியைப் பெற வேண்டும். மேலும பொருட்களைப் பயன்படுத்துவதில் அவரது நிலையில் மாற்றம் ஏற்படும் பொழுதும் அல்லது மாநில இயக்குநர் பணிக்கின்ற பொழுதும் மனமுவந்து வெளிப்படுத்த வேண்டும். ஏழ்மை வார்த்தைப் பாட்டைப் பொறுத்த அளவில் உறுப்பினர்கள் தனிப்பட்ட வாழ்வில் மறந்து வாழ்கின்ற போது அல்லது கடைப்பிடிக்காமல் இருக்கும் போது அதை அவர்களுக்கு அறிவுறுத்துவது அவசியமாகும்.

- தனிப்பட்ட வாழ்வில் ஏழ்மை வார்த்தைப்பாட்டை கடைப்பிடிக்கும் நிலை பற்றியும்
- சிறப்பாக தனிப்பட்ட நபர் பொருட்களைப் பயன்படுத்துவதில் தடுமாற்றம் ஏற்படும் போது, சபையின் சட்ட திட்டங்களையும் மாநில நடைமுறை வழிமுறைகளையும் நினைவுபடுத்தி அதற்கேற்ப வாழ வழிகாட்டுதல்.

ஏழ்மை என்னும் வார்த்தைப் பாட்டின் மூலம் உறுப்பினர்கள் தங்களின் பற்றற்ற நிலையை வெளிப்படுத்துகிறார்கள். எனவே தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தும் போது, பேராசைக்கு உட்பட்டு நிலை தடுமாறாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

உறுப்பினர்கள் தங்களுக்கென சொத்துக்களை, பொருட்களை, தங்கள் பெயரில் வைத்துக் கொள்ளும் உரிமையை தக்க வைத்துக் கொள்கிறார்கள். மேலும் சொத்துக்களை பெற்றுக் கொள்ளவும் அவற்றை மேலாண்மை செய்யவும், அதனால் கிடைக்கும் சொத்துக்களை தங்களிடம் வைத்துக் கொள்ளவும்

அனுமதிக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக தங்களது சொத்துக்களை விற்கவோ, பிறருக்கு மாற்றிக் கொடுக்கவோ, தங்களது கருத்துக்களைக் கூறவோ உரிமை உண்டு.

56. உறுப்பினர்களின் கூட்டுப் பொறுப்புணர்வை உணர்ந்து, சபையின் பொறுப்பாளர்கள் அனைருக்கும் தேவையானவை கிடைக்கின்ற வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். தங்களிடம் இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

57. சபை உறுப்பினர்கள் தங்களால் முடிந்த அளவு ஏழ்மை வார்த்தைப் பாட்டைப் பற்றி சபை கூறுவதற்கும் மேலாக இன்னும் கடுமையான விதத்தில் கடைப்பிடிக்க முன் வர வேண்டும். நீதியின் அடிப்படையிலும், சகோதரஅன்பின் அடிப்படையிலும் தேவையற்ற செலவினங்களைக் குறைத்து அவர்களுடைய உடமைகளை ஏழை எளிய மக்களோடு பகிர்ந்து கொள்ள முன் வர வேண்டும். இவ்வாறு ஏழை எளியோரை இன்னும் அதிகமாக அன்பு செய்ய முடியும்.

58. நிரந்தர உறுப்பினர்களாக சபையில் சேர்க்கப்படும் பொழுது, ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய சொத்துக்களைப் பற்றிய விருப்ப மனுவை (ஒப்பந்தம்) மாநில இயக்குநரிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போது சொத்துக்களைப் பற்றிய விவரங்கள், உண்மை ஆவணங்கள், சொத்துக்கள் உள்ள இடங்கள் போன்ற அனைத்து விவரங்களையும் அளிக்க வேண்டும்.

**கற்பு :**

59. அனைத்து மனுக்குலத்தின் மீது தந்தை கொண்ட அன்பை வெளிப்படுத்தியவர் தான் இயேசு. கடவுளின் நம்பிக்கைக்கு ஒரு சாட்சியாக விளங்கினார். கடவுளின் உணர்ச்சிகரமான அன்புக்குத் தன்னையே அர்ப்பணித்து, தன்னையே முழு கொடையாகக் கொடுத்தார். அதே வேளையில் இயேசு தன் வாழ்வை நம் அனைவர்க்காகவும் அர்ப்பணித்தார். இயேசு வழியாகக் கடவுளின் தனிப்பட்ட அன்பு நம் மேல் பொழியப்பட்டது. இவ்வாறு இந்த அன்பை அனைவர் மீதும் காட்ட அவர் விரும்புகிறார்.

60. கடவுளின் அழைப்பை ஏற்று வாழ முன்வருகின்றவர்கள், முழுமையான அன்பில் வாழ வேண்டுமென்றால், அர்ப்பணிக்கப்பட்ட கற்பு என்ற வார்த்தைப்பாடு, இந்த உலக மதிப்பீடுகளைக் கடந்து ஓர் உயர்ந்த அறிகுறியாகத் திகழ்கின்றது. உண்மையில் வரவிருக்கும் இறையரசின் ஒரு முன்னடையாளமாகத் திகழ்கிறது. பல்வேறு கட்டுக்களால் கட்டப்பட்ட இவ்வுலகில் கற்பு என்ற வார்த்தைப்பாடு ஒரு சவாலாக அமைந்திருக்கிறது.

உறுப்பினர்கள் அனைவரும் சார்பற்ற, அதே வேளையில் பொதுமையான அன்பின் மூலம் கடவுளையும், பிறரையும் அன்பு செய்ய நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். கற்பு என்ற வார்த்தைப் பாட்டின் மூலம் மணத்துறவை ஏற்று இச்சைகளைக் கட்டுப்படுத்தி வாழவும் தங்களையே முழுவதும் அர்ப்பணிக்கிறார்கள்.

61. அர்ப்பணிக்கப்பட்ட கற்பு என்னும் வார்த்தைப்பாட்டின் மூலம் கிறிஸ்துவுக்கே தங்கள் முழு முதல் அன்பு என்பதை உலகுக்குச் சான்று பகர்கிறார்கள். இந்த அன்பு இயேசுவில் வேரூன்றி, அவரிலே நிறைவு பெறுகிறது. இயேசு ஒருவரே உண்மையுள்ள இதயத்தையும் அனைவரையும் அரவணைத்துச் செல்கின்ற அன்பையும் உருவாக்குகிறார். பிறரிடமும் மற்றும் அனைவரிடமும் நாம் காட்டுகின்ற தூய்மையான மற்றும் நேர்மையான அன்புதான் நமது வாழ்வின் போராட்டமான சூழல்களில் நம் நம்பகத்தன்மை தொடர்ந்து நீடித்து நிலைத்து நிற்பதற்கு, துணை புரிகிறது.

**அர்ப்பண உறுதிமொழி அமைப்பு:**

62. அர்ப்பண உறுதி பின்வருமாறு இருக்க வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் திருப்பெயரால், எனது திருமுழுக்கு அருள் வாழ்வை இன்னும் முழுமையாக வாழும் பொருட்டும், மேலும் இயேசுக் கிறிஸ்துவில் அமைதியும் சகோதரத்துவமும் நிறைந்த வாழ்வை உருவாக்கும் பொருட்டும், நற்செய்தியின் மதிப்பீடுகளின்படி வாழும் பொருட்டும், கீழ்படிதல், ஏழ்மை, கற்பு என்னும் வார்த்தைப் பாடுகளை இறைத் திருவுள சபையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு (தேதி, மாதம், ஆண்டு) வரை அர்ப்பணிக்கின்றேன் (கொடுக்கின்றேன்). கடவுள் எனக்குத் துணை நிற்பாராக.

# இயல் - II :
# சபையோடு ஒருங்கிணைப்படுவோர்

**சேர்க்கை :**

63.

- தொடக்க நிலைப் பயிற்சி (Aspirancy)
- தகுதி காண் பயிற்சி (Probation)
- நிரந்தர உறுப்பினராவதற்கு முன் அர்ப்பண வாழ்வு
- நிரந்தர உறுப்பினர்

64. **சபையில் சேர விருப்பமுள்ளவர் அனுமதிக்கப்படுமுன் :**

(1) மாநில இயக்குநருக்கு விருப்பக் கடிதத்தை எழுத்து மூலம் அளிக்க வேண்டும்.

(2) சேர்க்கைப் படிவத்தை நிரப்பித்தர வேண்டும். (பூர்த்தி)

(3) பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

- உறுப்பினரின் தன் விவரக் குறிப்பு
- திருமுழுக்கு, உறுதிபூசுதல் சான்றிதழ்கள் மற்றும் அவரது வாழ்க்கையைக் குறிப்பிடும் சான்று ஆவணங்கள்.
- உறுப்பினர் சபையில் இணைவதற்கு எவ்விதத் தடையுமில்லை என்பதை வெளிப்படுத்தும் அறிக்கை.
- உறுப்பினரின் உடல் நிலை, மனநிலை, ஒழுக்க நிலை ஆகியன பற்றித் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து சான்றிதழ்
- குருக்களாக அருட்பொழிவு செய்யப்படுவோர் இவை தவிர மேலும் சபை அதிகாரிகள் கேட்கின்ற தேவையான விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

- சபையில் அனுமதிக்கப்படுவோர், திருத் தொண்டராகவோ, குருவாகவோ அல்லது ஆயருக்குக் கட்டுப்பட்டவராகவோ இருந்தால் அந்த ஆயரிடமிருந்து அனுமதிக் கடிதம் தர வேண்டும்.

65. சபையில் சேர விருப்பமுள்ளவரை தொடக்க நிலைப் பயிற்சிக்கு அனுமதிக்கும் உரிமை, ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி மாநில இயக்குநருக்கு மட்டும் உண்டு.

எங்கெல்லாம் மாநில இயக்குநர் இல்லையோ அப்படிப்பட்ட இடங்களில் சபையின் இயக்குநர் அவரது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி அனுமதிப்பார்.

66. தொடக்க நிலைப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் எந்த காரணத்திற்காகவாவது சபையை விட்டு வெளியேறினால், சபையில் இருந்த காலத்திற்கு இழப்பீட்டுத் தொகை எதுவும் கேட்கமாட்டேன் என எழுத்துப் பூர்வமாக ஆவணக் கடிதம் தர வேண்டும்.

67. **தொடக்க நிலைப் பயிற்சி**: தொடக்க நிலைப் பயிற்சியின் முக்கிய நோக்கம் என்னவென்றால், சபையில் சேர விருப்பமுள்ள உறுப்பினரின் பண்பு நலன்கள், குண நலன்கள் மற்றும் அவருடைய நோக்கம், அதை வெளிப்படுத்தும் திறன் போன்றவற்றை முழுமையாகத் தெரிந்து கொள்வது தான். அதே வேளையில் விருப்பம் தெரிவித்த உறுப்பினரும் நமது சபையைப் பற்றி முழுமையாக தெரிந்து கொண்டு, நமது வாழ்வை வாழ்ந்து அனுபவம் பெறவும், நமது சபையின் பணிகளைப் பற்றியும், நோக்கத்தையும் தெளிவாகக் கண்டுணரவும் அதன் வழியாக தனது அழைத்தல் வாழ்வை ஆழப்படுத்துவதும் ஆகும்.

68. மாநிலக் குழுவின் பரிந்துரைப்படி தேவைக்கேற்ப இப்பயிற்சிக் காலம் 6 மாதத்திலிருந்து இரண்டு வருடத்திற்குள் இருக்கலாம்.

69. குறிப்பிட்ட காலத்தில் தொடக்க நிலைப் பயிற்சியாளர், பயிற்சி காலத்தில் சேர, தான் தயார் என்பதை எழுத்து மூலம் தன் விருப்பத்தை மாநில இயக்குநரிடம் தருவார்.

அவரது விண்ணப்பத்தை ஆய்வு செய்து, அவரைச் சபையில் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளும் உரிமை ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி மாநில இயக்குநருக்கு மட்டுமே உண்டு.

70. தொடக்க நிலைப் பயிற்சியாளரை, சபையின் பயிற்சிக்கு அனுமதிக்கும் வேளையில் அந்த நபரைத் தியானம் செய்ய அனுமதிக்க வேண்டும். அதன் பின் தான் அவர் அனுமதிக்கப்பட வேண்டும்.

71. ஒரு வேளை தொடக்க நிலைப் பயிற்சியாளரை பயிற்சிக்கு அனுமதிக்காமல் வெளியே அனுப்பி விட வேண்டுமென்றால் மாநில இயக்குநர் அதற்குரிய

காரணங்களை அந்த நபருக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எனவே இத்தகைய முடிவை எடுக்கும் போது மிகுந்த கவனத்தோடும். பிறரன்பை தன் மனதில் வைத்தும் எடுக்க வேண்டும்.

72. **பயிற்சிக் காலம்** : முதல் வார்த்தைப் பாட்டிற்குத் தயாரிக்கும் காலத்தைப் பயிற்சி காலம் என அழைக்கின்றோம். இப்பயிற்சியின் நோக்கம் என்னவென்றால் நமது சபைக்கு ஏற்ற ஆன்மீகப் பயிற்சியைத் தருவது தான்.

73. பயிற்சிக் காலத்தில் அனுமதிக்கப்படுபவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் :

- 18 வயதை நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்
- வேறு எந்த துறவறச் சபையிலாவது வார்த்தைப்பாடுகள் எடுத்தவராகவோ அல்லது வேறு அப்போஸ்தலிக்க சபையின் உறுப்பினராகவோ இருக்கக்கூடாது.
- திருமணம் என்னும் அருட்சாதனத்தில் வாழ்பவராக இருக்கக் கூடாது.

74. கீழ்த்திசை வழிபாட்டு நெறிமுறையில் உள்ள ஒருவரை அனுமதிக்க வேண்டுமென்றால் திருச்அவைச் சட்டத்தின் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

75. தகுதியுள்ள ஒருவர் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுமுன் இரண்டு சாட்சிகளின் முன், மாநில இயக்குநரிடமோ அல்லது அவரது பிரதிநிதியிடமோ பயிற்சியாளர் பின்வரும் உறுதி மொழியை வாசித்து கையொப்பமிட வேண்டும்.

"இன்றைய நாளில் (15-1-2020) முழுமனச் சுதந்திரத்துடன், இறைத் திருவுளச் சபையில் உறுப்பினர் என்ற வகையில், இன்றைய உலகில், எம் சபை வழியாக திரு அவைக்கு மறைப்பணி ஆற்ற என் பயிற்சிக் காலத்தைத் தொடங்குகிறேன். சபை என் முன் வைக்கின்ற பல்வேறு திட்டங்கள் வழியாகப் புனிதத்துவத்தை அடைய நான் கடுமையாக உழைப்பதற்கு என்னை அர்ப்பணிக்கின்றேன். கடவுள் எனக்குத் துணை புரிய வருவாராக!"

76. பயிற்சிக் கால அளவை, மாநில ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி மாநில இயக்குநர் முடிவு செய்யலாம். ஆனால் பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளுக்குள் இருக்க வேண்டும். அதற்கு மேல் நீடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

77. தகுந்த செபம், சுய ஆய்வு மற்றும் ஆலோசனைக்குப் பின் பயிற்சியாளர் சபையின் வாழ்க்கைமுறை ஏற்புடையதாக இல்லையென்றால் அல்லது கடவுளின் அழைப்பை ஏற்று வாழ விருப்பமில்லையென்றால், எப்பொழுது வேண்டுமென்றாலும் அவர் வெளியேறலாம் அல்லது மாநில இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி அவரை சபையை விட்டு வெளியேற்றலாம். இப்படிப்பட்ட தருணங்களில் இதற்குரிய காரணங்களை

அவரிடம் கூற வேண்டிய அவசியமில்லை. எனவே இம்முடிவை எடுப்பதற்கு முன் மிகக் கவனமாகச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து, சகோதர மனப்பான்மையுடன் இம்முடிவை எடுக்க வேண்டும்.

**அர்ப்பண வாழ்வு:**

78. தகுந்த காலத்தில் பயிற்சியாளர் வார்த்தைப்பாடுகளின் மூலம் அர்ப்பண வாழ விரும்பினால் தன் விருப்பத்தை எழுத்து மூலமாக மாநில இயக்குநரிடம் வழங்க வேண்டும். அவரும் தனது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி அவரது விருப்பத்தை ஏற்கலாம். அப்படி ஏற்கப்பட்டவர் தனது பயிற்சிக் காலத்தின் ஆண்டின் நிறைவு நாளில் வார்த்தைப்பாடுகள் வழியாக தன் அர்ப்பணத்தைக் கொடுக்கலாம். இதற்கு முன்தயாரிப்பாக நல்ல தியானம் செய்ய வேண்டும்.

79. அர்ப்பணத்தின் மூலம் பயிற்சியாளர்

- இன்றைய சபையின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப கீழ்ப்படிதல், ஏழ்மை, கற்பு என்ற வார்த்தைப்பாடுகளைத் தருகிறார்.
- சபையின் ஆன்மீகத்தின் அடிப்படையில் அர்ப்பண வாழ்வின் முழுமையை அடைவேன் என தன்னை அர்ப்பணிக்கிறார். மேலும் தனது சபையின் அதிபர்களுடைய வழிகாட்டுதல் படி அப்போஸ்தலிக்கப் பணி வாழ்வில் ஈடுபடுவேன் என உறுதி தருகிறார்.

80. வார்த்தைப்பாடுகளை ஓர் ஆண்டிற்கும் அதன் பின் ஆண்டின் நிறைவில் அந்த வார்த்தைப் பாடுகளைப் புதுப்பிக்கலாம். தனது முதல் வார்த்தைப் பாட்டின் தொடக்கத்திலிருந்து தன்னையே முழுமையாக, நிறைவாக, உடல், பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கையாக ஒப்புக் கொடுப்பேன் என்பதைத் தன் மனதில் இருத்த வேண்டும்.

ஒவ்வொரு மாநிலமும் வார்த்தைப்பாடுகளைப் புதுப்பிக்கும் நாளை அதிகாரப் பூர்வமாக அறிவிக்கலாம்.

81. அர்ப்பண வாழ்விற்கு அனுமதிக்குமுன் கடைப்பிடிக்க வேண்டியவை. (கவனத்தில் கொள்ள வேண்டியவை)

(1) பயிற்சியாளரின் வேண்டுதல் விண்ணப்பத்தின் படி மாநில இயக்குநர் அங்கீகரிக்கப்பட்ட சபையின் நடைமுறைகளின் படி முதல் வார்த்தைப்பாட்டிற்கு அனுமதி தரலாம்.

(2) நிரந்தர வார்த்தைப்பாட்டிற்கு அனுமதிப்பதற்கு முன், அவருடைய விருப்ப விண்ணப்பத்திற்குப் பின் மாநில இயக்குநர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின் படி அனுமதிக்கலாம்.

(3) நிரந்தர உறுப்பினராக வார்த்தைப்பாடு எடுப்பதற்கு முன் உள்ள அனைத்து வார்த்தைப்பாடு நிகழ்வுகளில் வார்த்தைப்பாடு விண்ணப்பப் படிவத்தில், நிரந்தர உறுப்பினர் ஒருவரின் கையொப்பம் மற்றும் மாநில இயக்குநர் அல்லது அவரது பிரதிநிதியோ மற்றும் ஒரு சாட்சியின் கையொப்பம் இருக்க வேண்டும். அதன் பின் வார்த்தைப்பாட்டுப் படிவம் மாநில இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(4) நிரந்தர உறுப்பினராக ஒருவர் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன், சபையின் இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவின் அனுமதியை எழுத்துப் பூர்வமாக பெற வேண்டும்.

(5) நிரந்தர வார்த்தைப் பாட்டிற்குப் பின் வருகின்ற அர்ப்பணங்களைப் புதுப்பிப்பவரின் விருப்பத்தை உணர்ந்தாலே போதும். மாநில இயக்குநர் எழுத்துப் பூர்வமாக அனுமதியளிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இதற்கு முன் நடந்த அர்ப்பண நிகழ்வுகளைப் போல அர்ப்பண விண்ணப்பத்தில் நிரந்தர உறுப்பினர் மற்றும் ஒரு சாட்சியின் கையொப்பம் இருக்க வேண்டும். இவை மாநில இயக்குநரிடம் அனுப்பி வைக்கப்படும் அவரும் இதைச் சபையின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைப்பார்.

82. **அங்கீகரிக்கப்படுவதற்குரிய நிபந்தனைகள்:**

(1) முதல் வார்த்தைப் பாட்டிற்கு முன் இரண்டு ஆண்டுகள் பயிற்சிக் காலத்தை நம் சபையின் சட்ட ஒழுங்குகள் எண் 76 படி பெற்றிருக்க வேண்டும்.

(2) உறுப்பினர் சபையில அனுமதிக்கப்படுமுன் நமது சபையின் ஒழுங்குகள் எண் 65 மற்றும் 78 படி தகுந்த அதிகாரமுள்ளவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) வார்த்தைப்பாட்டுக்குரிய படிவம் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பில் இருக்க வேண்டும்.

(4) நிரந்தர உறுப்பினர் எடுக்கும் வார்த்தைப் பாட்டிற்கு முன் உள்ள அனைத்து வார்த்தைப்பாடுகளும் மாநில இயக்குநர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவரது பிரதிநிதி மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

(5) நிரந்தர வார்த்தைப் பாட்டிற்கு பின் உள்ள வார்த்தைப்பாடுகளை இன்றைய சபையின் சட்ட ஒழுங்குகளின் படி இரண்டு சாட்சிகள் கையயொப்பம் பெற்று அந்த வார்த்தைப் பாட்டுப் படிவத்தை மாநில

இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவரும் அதைச் சபை இயக்குநருக்கு அனுப்பி வைப்பார்.

83. வார்த்தைப்பாடுகளைப் புதுப்பிக்கும் நாள், காலச் சூழ்நிலைகளுக்கேற்ப சில மாற்றங்களோடு அனுமதிக்கலாம். ஆனால் புதுப்பிக்கும் நாளுக்கு முன்போ அல்லது பின்போ ஒரு மாத இடைவெளி மட்டும் இருக்க வேண்டும். எல்லா வேளைகளிலும் வார்த்தைப்பாட்டு நாள் அதேதான் இருக்கும். ஒருவேளை முன் கூட்டியே வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்தாலும் அவரது வார்த்தைப்பாட்டு நாளில் இருந்து தான் தொடங்குகிறது. ஒரு வேளை சூழ்நிலை காரணமாக உறுதிப்பாட்டு நாளை தள்ளி வைத்தாலும் அவரது அர்ப்பண வாழ்வு தொடர்கிறது. இந்த இரண்டு சூழல்களிலும் உறுப்பினருடைய மனநிலை தனது அர்ப்பணத்தைத் தொடரவேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

84. முதல் வார்த்தைப்பாடு எடுத்த நாளிலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் நிரந்தர உறுப்பினராகும் வார்த்தைப்பாடு எடுக்க அனுமதிக்கப்படவில்லையென்றால் அத்தகைய நபர் சபையை விட்டு வெளியேற வேண்டும்.

**நிரந்தர உறுப்பினர், குருத்துவ அருட்பொழிவு மற்றும் சபை உறுப்பினராக இணைத்துக் கொள்தல்**

85. முதல் வார்த்தைப்பாட்டின் நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின், சபை நிரந்தரத் தன்மையுள்ள உறுப்பினராக ஏற்றுக் கொள்ளலாம்.

- இத்தகைய உறுப்பினர் 24 வயது நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.
- மாநில இயக்குநரிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.
- மாநில ஆலோசனைக் குழு பொது நிர்வாகக் குழுவுக்குப் பரிந்துரைக்க வேண்டும்.
- பொதுக்குழு அந்த உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ள அனுமதி தர வேண்டும்.

86. சபையில் நிரந்தர உறுப்பினராவது, பின்வரும் வார்த்தை அமைப்புகளில் இருக்க வேண்டும். இறைத் திருவுள சபையானது (நபரின் பெயர்), (ஆண்டுகள்) அர்ப்பண வாழ்வில் நிலைத்திருந்த அவரோடு இணைந்து எல்லாம் வல்ல இறைவனுக்கு மகிழ்வோடு நன்றி கூறுகின்றது. எனவே இவரை நிரந்தர உறுப்பினராக ஏற்றுக் கொள்ள சம்மதிக்கிறது. எனவே இவர் நிரந்தர உறுப்பினராக சபையில் ஒன்றிணைக்கப்படுகிறார்.

87. குருவாக அருட்பொழிவு பெற்றவர் விரும்பினால் மறை மாவட்டத்தோடு இணைத்துக் கொள்ளவோ அல்லது வேறு ஒரு சபைக்குச் சென்று பணியாற்றவோ விரும்பினால் அனுமதிக்கலாம்.

வார்த்தைப்பாடுகள் எடுத்து வாழும் உறுப்பினர் நிரந்தர உறுப்பினராக விரும்பினால் அவர் ஏற்கனவே ஒரு மறை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தால் அவற்றில் தொடர்ந்து நீடிக்கலாம் அல்லது நம் சபையோடு இணைந்து கொள்ளலாம்.

(1) குருவானவர் மறை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தால் அத்தகைய நபர் நம் சபையில் நிரந்தர உறுப்பினராக வர விரும்பினால் அவர் சார்ந்திருக்கும் மறை மாவட்ட ஆயரின் அனுமதி அவசியம்.

(2) குருவானவர் நமது சபையோடு தன்னை இணைத்துக் கொள்ள விரும்பினால், அவரது வரவு நமது சபைக்கும் மறை பரப்பு பணிக்கும் பெருந்துணைபுரியும் என சபையின் அதிகாரிகள் விரும்பினால் அவரைச் சேர்த்துக் கொள்ளலாம், ஆனால் அவர் முதலில் நிரந்தர உறுப்பினராக நமது சபையில் இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போது மறைமாட்டத்திலிருந்து சபைக்கு வரும் போது என்ன விதிமுறைகள் கையாள வேண்டும் என்று நம் திருச்அவைச் சட்ட நூல் கூறும் கருத்துக்களை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

88. குருத்துவ அருட்பொழிவு பெற இருக்கும் நபர் தன்னை நம் சபையில் இணைத்துக் கொள்ள விரும்பினால், அவரது வருகை நம் சபைக்கும், மறைப் பணிக்கும் பெருந்துணை புரியும் என நம் சபையின் மேலதிகாரிகள் விரும்பினால், முதலில் அவர் நம் சபையில் நிரந்தர உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்ட பின்புதான் குருத்துவ அருட் பொழிவுக்கு அனுமதிக்க வேண்டும்.

**சபையிலிருந்து வெளியே செல்ல விரும்புவர்களுக்கு:**

89. வார்த்தைப்பாடுகள் எடுத்து பல ஆண்டுகள் நம் சபையில் வாழ்ந்த பின், தகுந்த காரணங்களை சபை அதிபர்கள் கண்டால் அவர் வார்த்தைப்பாட்டின் காலம் முடியும் நாளில் அவரே வெளியே செல்லலாம். குருவாக அருட் பொழிவு பெற்றவர் நம் சபையிலிருந்து வெளியே செல்ல விரும்பினால், அவர் திருஅவையின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படவேண்டும். வெளியே செல்லுமுன் அவரை ஏதாவதொரு

மறைமாவட்ட ஆயர், அவரைத் தன் மறை மாவட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும். அது நிரந்தரமாகவோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்காகவாவது

இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த உறுப்பினர் தனது குருத்துவப் பணியைத் தொடர்ந்து செயலாற்ற முடியும்.

இவ்வாறே தகுந்த காரணங்களுக்காக, மாநில இயக்குநர் தன் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப் படி, சபையில் நிரந்தர உறுப்பினராக இல்லாத நபருக்கு வார்த்தைப் பாட்டை மீண்டும் எடுக்க அனுமதி மறுக்கலாம். இத்தகைய உறுப்பினர் சபையில் தொடர்ந்து வாழ முடியாது மாறாக செல்ல வேண்டும்.

90. மிகத் தேவையான தருணங்களில் அவரது வார்த்தைப்பாட்டின் காலம் முடிவடைவதற்கு முன் சபையை விட்டு அவர் வெளியேற விரும்பினால், அத்தகைய உறுப்பினர் சபையின் இயக்குநரிடம் அதற்குரிய அனுமதியைப் பெற வேண்டும். அவருடைய உத்தரவு மட்டும் தான் உறுப்பினரது வார்த்தைப் பாட்டுக் கடமைகளிலிருந்து அவரை விடுவிக்கும்.

91. நிரந்தர உறுப்பினராகாமல், வார்த்தைப்பாடுகள் மூலம் அர்ப்பண வாழ்வு வாழ்ந்து வரும் ஒருவரை வெளியேற்ற விரும்பினால் அதற்குப் பொருத்தமான நல்ல காரணங்கள் இருக்க வேண்டும்.

- நம் சபையின் குறிக்கோளுக்கு மாறாக செயல்படுதல்
- பிறருடைய அர்ப்பண வாழ்விற்குத் தடையாக இருத்தல்
- சுட்டிக் காட்டும் தவறுகளைத் திருத்திக் கொள்ள மனம் இல்லாதிருத்தல்
- அழைத்தல் வாழ்வில் மந்த நிலை
- நமது சபையின் சட்ட ஒழுங்குகள் சுட்டிக்காட்டும் ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்யாமல் இருப்பது

மேலே கண்ட தருணங்களில் உறுப்பினர் தவறு செய்யும் போது, மாநிலத் இயக்குநர் இரண்டு சாட்சிகளின் முன், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என இரண்டு முறை எச்சரிக்கலாம். இரண்டு முறை எச்சரித்த பின்பும் அவரது வாழ்க்கை முறையில் மாற்றம் இல்லையென்றால், மாநில இயக்குநர் இந்த சம்பவத்தை ஆலோசனைக் குழுவிடம் எடுத்துச் செல்லலாம். ஆலோசனைக் குழுவில் அது இரகசிய ஓட்டெடுப்புக்கு விடப்படும். அதில் பெரும்பாலானோர் அவரை வெளியே அனுப்புவதை ஏற்றுக் கொண்டால், அத்தகைய உறுப்பினர் வார்த்தைப்பாட்டைப் புதுப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்.

ஒருவேளை மாநில ஆலோசனைக்குழு அவரது வார்த்தைப் பாட்டு நிறைவு நாளுக்கு முன் அவரை வெளியே அனுப்ப விரும்பினால், இத் தீர்மானம் மத்திய ஆலோசனைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். மத்திய குழுவும் அவரது வெளியேற்றத்திற்கு அனுமதி வழங்கினால், சபை இயக்குநர் அந்த

உறுப்பினரை வெளியேற்ற உத்தரவிடுவார். ஆனால் இந்த உத்தரவு திருத்தந்தையின் ஒப்புதலுக்குப் பின்புதான் செயல்பாட்டுக்கு வரும்.

92. நிரந்தர உறுப்பினரை சபையிலிருந்து வெளியேற்ற தகுந்த பொருத்தமான காரணங்கள் வேண்டும்

(1) இயற்கை வாழ்வுக்கு முரண்பட்ட நிலை

(2) தனது வார்த்தைப்பாடுகளில் பிரமாணிக்கமின்றி வாழ்தல்

- கற்பு வார்த்தைப்பாட்டிற்கு எதிராக செயல்படுவது
- தனது மேலதிகாரிகள் குறிப்பிடும் அல்லது தன்னால் முடிந்த பண உதவியைச் சபைக்குச் செய்யாமல் இருத்தல்
- வார்த்தைப் பாட்டின் பெயரில் தரும் கட்டளைகளைச் செய்யாமல் இருத்தல்

மேற்கண்ட சூழ்நிலைகளில் உறுப்பினரை அழைத்து, குறைகளைச் சரிசெய்யவில்லையென்றால் வெளியேற்றப்படுவார் என இரண்டு முறை எழுத்து மூலமாகவோ அல்லது இரண்டு சாட்சிகளுக்கு முன்னாலோ எச்சரிக்கலாம். இரண்டு எச்சரிக்கைக்குப் பின்பும் உறுப்பினர் தன் நடவடிக்கையில் எந்தவித மாற்றமும் காட்டவில்லையென்றால், ஆலோசனைக் குழுவிடம் எடுத்துச் செல்லப்படும்.

ஆலோசனைக் குழுவில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தங்கள் கருத்துக்களை மறைமுக ஓட்டெடுப்பின் மூலம் தெரிவிப்பார்கள். தவறு உறுதி செய்யபட்டால் அத்தீர்மானம் மத்திய குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். மத்திய குழுவும் வெளியேற்றத்தை அங்கீகரித்தால், சபையின் இயக்குநர் உறுப்பினரைச் சபையை விட்டு வெளியேற்றுவார். இந்த உத்தரவு திருத்தந்தையின் ஒப்புதலுக்குப் பின் தான் நடைமுறைப்படுத்தப்படும். வெளியே அனுப்பும் போது சபையில் அவர் கொடுத்த வார்த்தைப்பாடுகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.

93. வெளியே அனுப்பப்படுபவர் உண்மையிலேயே தன் வாழ்வை நடத்த முடியாத அளவுக்கு வறுமைநிலையில் இருக்கிறார், எனவே ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று ஆலோசனைக்குழு முடிவெடுத்தது என்றால், சகோதர மனப்பான்மையுடன் ஏதாவது உதவி புரியலாம்

94. ஏதாவது ஓர் உறுப்பினரை வெளியே அனுப்ப வேண்டிய சூழல் வரும் போது, மாநில இயக்குநரும், சபை இயக்குநர் அவர்களும் இயேசுவின் மனநிலையைப் போல அத்தகையவரை பாசத்துடன் எந்த அளவுக்குத் திருத்தி மீண்டும் அவரைத் தன்னுடைய அழைத்தல் வாழ்வில் நிலைத்து நிற்க எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு முன்மதியோடு முயற்சிகள் எடுக்க வேண்டும். அதே வேளையில் நீதியையும், சகோதர அன்பையும் மனதில் கொண்டு செயல்பட்டு,

வெளியேறும் உறுப்பினர் எந்த விதமான கசப்பான மனநிலையிலும் செல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

95. ஒரு வேளை உறுப்பினர் வெளியேற அல்லது வெளியேற்றப்பட வேண்டிய சூழலில்

(1) மறை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டவர் தொடர்ந்து அந்த மறை மாவட்டத்தில் பணிபுரிவார்.

(2) சபையோடு இணைத்துக் கொண்ட உறுப்பினர் ஏதாவதொரு மறை மாவட்ட ஆயரை அணுகி தன்னை இணைத்துக் கொள்ளலாம். அச்சமயத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

## இயல் - III :
## நோயுற்ற மற்றும் இறந்த உறுப்பினர்கள்

96. நோயுற்ற சகோதரர்களுக்கு தங்களால் முடிந்த அளவு மருத்துவ உதவியும், ஆன்மீக பலமும் தந்து உதவிட வேண்டும். அதே வேளையில் நம் கிறிஸ்துவ மனப்பான்மையில் துன்பத்தை எவ்வாறு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனநிலையை நோயுற்றவர் உணர துணை புரிய வேண்டும்.

97. சாகுந்தருவாயில் இருக்கும் உறுப்பினருக்கு குழுவின் வழிநடத்துநர் அவரிடம் பக்குவமாக எடுத்துரைக்க வேண்டும். உறுப்பினர் ஒருவேளை மரணத்தைச் சந்திக்கும் சூழலில் இருந்தால் குழுவின் வழிநடத்துநர் அவரை நன்கு தயாரித்து, தேவைப்படின் நோயிப் பூசுதல் அருட்சாதனத்தை வழங்கி அவர் நல் மரணத்தைச் சந்திக்கத் தயாரிக்க வேண்டும். அவருடைய உற்றார் உறவினருக்கும் தக்க சமயத்தில் தெரிவிக்க வேண்டும்.

98. உறுப்பினரின் இறப்புக்குப் பின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இறப்புச் செய்தியைத் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்க வேண்டும். முடிந்த அளவு அனைவரும் அவரது நல்லடக்கத் திருப்பலியில் கலந்து கொண்டு அவருக்காகச் செபித்து நமது ஒன்றிணைப்பை வெளிப்படுத்த வேண்டும்.

99. ஒவ்வொரு உறுப்பினரும் மாதத்தில் ஒரு நாள் இறந்த நம் சபை உறுப்பினர்களுக்காகவும், நமது உபகாரிகளுக்காகவும் (ஆதரவாளர்களுக்காகவும்) சிறப்பான முறையில் செபிக்க அழைக்கப்படுகின்றனர்.

100. திருத் தந்தையின் இறப்பின் போதும், தலத்திரு அவை ஆயரின் இறப்பின் போதும் அவர்களுக்காகச் செபிக்க நம் உறுப்பினர்கள் அழைக்கப்படுகிறார்கள்

# பகுதி – 3

# சபையிலுள்ள இணை உறுப்பினர்களின் வாழ்க்கை முறை

## இயல் - I :
## இணை உறுப்பினர்கள்

101. திருமணம் என்னும் அருட்சாசனத்தின் மூலம் இணைக்கப்பட்ட தம்பதியர் தங்களது திருமுழுக்கு வாழ்வை இன்னும் நிறைவோடு வாழ்ந்து, மேலும் நற்செய்தியின் தூதுவர்களாக இவ்வுலகில் வாழவும், சபையோடு இணைந்து

தங்களால் இயன்ற பணிகளைச் செய்ய முன்வரும் தம்பதியரை, இறைத் திருவுளச் சபை அழைப்பு விடுக்கின்றது.

தம்பதியருடைய வாழ்க்கை நிலையை மனதில் கொண்டு சபை அவர்களுக்குப் பின்வரும் பணிகளை முன் வைக்கிறது.

- நற்செய்தி மதிப்பீடுகளுக்கு தங்களை முழுதும் அர்ப்பணித்து வாழ
- உயிரூட்டமுள்ள பிறரன்பை மையமாகக் கொண்ட ஆன்மீகம்
- சபையில் உள்ள அனைவர்க்கும் உரிய பொதுவான அப்போஸ்தலப் பணி
- குழு வாழ்வு
- சபையின் வாழ்விலும், நிர்வாக அமைப்பிலும் பங்கு கொள்வது

102. இணை உறுப்பினர்கள் எல்லாவற்றிலும் சபையின் ஆன்மீகத்தை மையமாகக் கொண்டு வாழ்கிறார்கள். இந்த ஆன்மீக வாழ்விற்கு அடிப்படையான சபை ஒழுங்குகளில் உள்ள அனைத்து அம்சங்களையும் கடைப்பிடித்து வாழ்கிறார்கள். (எண் : 1-11)

103. **இயேசுவின் அமைதியையும், சகோதரத்துவத்தையும் உருவாக்க** : இதுதான் சபையிலுள்ள அனைத்து உறுப்பினர்களின் இலட்சியம், அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அவர்கள் உள்ளத்தில் இதைப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். (எண் : 12-14)

104. இணை உறுப்பினர்கள் அனைவரும் சபையின் குழு வாழ்வில் முழுமையாகப் பங்கு பெறுகிறார்கள்.

105. இணை உறுப்பினர்களுக்குப் பொருந்தாத சில குறிப்புகள், நிலைகள் தவிர மற்ற அனைத்திலும், அதாவது வாழ்விலும், நிர்வாக அமைப்பிலும் பங்கு பெறுகிறார்கள். (எண் : 138, 147, 151, 156, 163, 168, 172, 181, 191, 192, 194, 199, 206)

## இயல் - II :
## இணை உறுப்பினர்களின் அர்ப்பணம்

106. நற்செய்தி குறிப்பிடும் கிறிஸ்துவ இலட்சிய வாழ்வுக்கு, இணை உறுப்பினர்கள் தங்களை அர்ப்பணித்து வாழ அழைக்கப்படுகிறார்கள். இத்தகைய அர்ப்பண வாழ்வின் மூலம் திரு அவைக்கு, சபை வழியாக அழைக்கப்படுகிறார்கள்.

திருமணத்தில் தாங்கள் கொடுத்த அர்ப்பணத்தை உணர்ந்து வாழவும், தங்கள் குடும்பத்திலும், உலகிலும் நற்செய்தி மதிப்பீடுகளுக்குச் சாட்சிகளாக வாழ்ந்து, கடவுளுக்குத் தங்களை அர்ப்பணித்து வாழ அழைக்கப்படுகிறார்கள்.

107. இந்த அர்ப்பண வாழ்வை இவர்கள் கீழ்படிந்து, ஏழையாக, தூய்மையாக வாழ்ந்த இயேசுவை தங்கள் வாழ்வின் நிலைக்கு ஏற்ப வாழ்ந்து காட்ட அழைக்கப்படுகிறார்கள்.

108. இணை உறுப்பினர்களின் அர்ப்பணமான கீழ்படிதல், ஏழ்மை, கற்பு இவற்றிற்கான உத்வேகம், கீழே குறிக்கப்பட்ட அம்சங்களைத் தவிர மற்ற அர்ப்பணமான உறுப்பினர்களுக்குத் தரப்பட்ட அனைத்து அம்சங்களிலிருந்தும் பெற்று கொள்கிறார்கள்.

(1) கீழ்படிதலைப் பொறுத்த அளவில் திருமணமான தம்பதியர் தங்கள் திருமணத்தில் கொடுத்த வாக்குறுதிகளின் படி ஒருவருக்கொருவர் கீழ்படிந்து வாழ வேண்டும் என்பதை இணை உறுப்பினர்களும், சபை அதிகாரிகளும் மனதில் இருத்த வேண்டும்

(2) ஏழ்மையைப் பொறுத்த அளவில் தம்பதியர் தங்களிடையேயும், தங்கள் பிள்ளைகளிடமும். உற்றார் உறவினரிடமும், நீதி, பிறரன்புப் பணிகள் போன்ற கடமைகளில் சிறந்து வாழ முற்பட வேண்டும் என்பதை இணை உறுப்பினர்களும், சபை அதிகாரிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(3) கற்பு வார்த்தைப்பாட்டைப் பொறுத்த அளவில், பிறரை அன்பு செய்ய விடுக்கும் இயேசுவின் சிறப்பு அழைப்புக்கு இணை உறுப்பினர்கள் செவிமடுத்து, தம்பதியர் ஒருவருக்கொருவர் திருமண உறவில் பிரமாணிக்கமாக இருக்கவும், திருமணக் கடமைகளை நிறைவேற்றும் போது கற்பு என்ற வார்த்தைப் பாட்டுக்கு ஏற்ப வாழ்கிறார்கள். இவ்வாறு வாழும் இவர்கள் கடவுளுக்கு மிகுந்த புகழ்ச்சியையும், உண்மையான அன்புக்கு இவ்வுலகில் சாட்சிகளாகவும் வாழ்கிறார்கள். இத்தகைய அருட்சாதன நம்பகத்தன்மை, கடவுள் மனுக்குலத்தை அன்பு செய்ததை வெளிப்படுத்தும் ஓர் அடையாளமாக இருக்கிறது.

தம்பதியர் தங்கள் திருமண உறவில் நேர்மையோடு வாழ்ந்து, இந்த அர்ப்பணத்தின் வழியாகத் தங்களைக் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் போது கற்பு வாழ்க்கை வாழ்கிறார்கள். தம்பதியர்களுள் யாராவது ஒருவர் இறந்தபின், மறுமணம் செய்யவில்லையென்றால் அந்த நபர் ஆணோ, பெண்ணோ தொடர்ந்து தங்கள் அர்ப்பணத்தின் மூலம் சபையின் இணை உறுப்பினர்களாக தொடர்ந்து இருக்கலாம்.

109. **இணை உறுப்பினர்களின் அர்ப்பண படிவம் :**

“ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் இனிய நாமத்தினால், எனது திருமுழுக்கு அருளை முழுமையாக வாழவும், அமைதியும். சகோதரத்துவம் நிறைந்த வாழ்வை வாழவும், இறைத் திருவுளச்சபையில் இணை உறுப்பினராக என்னை அர்ப்பணிக்கின்றேன். என் அர்ப்பணமான கீழ்ப்படிதல், ஏழ்மை, கற்பு ஆகியவற்றை இறைத் திருவுளச் சபையின் விதிமுறைகளுக்கு ஏற்ப இந்நாள் வரை (தேதி, மாதம், ஆண்டு) அர்ப்பணித்து வாழ என்னையே அர்ப்பணிக்கின்றேன். எல்லாம் வல்ல இறைவன் எனக்குத் துணை புரிவாராக!”

# இயல் - III :
# இணை உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்தல் தொடர்பாக

110. **சேர்க்கை:**

இணை உறுப்பினர்களை சபையில் சேர்த்து கொள்ளுமுன் பல்வேறு நிலைகளைப் படிப்படியாகக் கடந்து இறுதியில் முழு உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

பின்வரும் பல்வேறு நிலைகள் :

- தொடக்கப் பயிற்சி

- பயிற்சிக் காலம்
- நிரந்தரத்திற்கு முன் அர்ப்பணம்
- நிரந்தர உறுப்பினர்

111. இறைத் திருவுளச் சபையில் சேர்வதற்கு முன் உறுப்பினர் எந்தவிதமான கட்டுப்பாகளிலிருந்தும் விடுபட்டவராக இருக்க வேண்டும். மேலும் நேரிய உள்ளத்துடனும் நோக்கத்துடனும், சபை குறித்துக்காட்டுகிற ஆன்மீக மற்றும் அப்போஸ்தலிக்க வாழ்வை அர்ப்பண உணர்வோடும், தங்கள் திருமண அர்ப்பண வாழ்வை வாழ்வதற்குத் தேவையான முதிர்ச்சியான மனநிலையும் இருக்க வேண்டும்.

112. சபை எதிர்பார்க்கின்ற சாதாரண மற்றும் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். சபையில் அனுமதிக்கப்படு முன் ஒவ்வொரு உறுப்பினரும்

    (1) மாநில இயக்குநருக்கு விண்ணப்பக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

    (2) சபையின் சேர்க்கைப் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

    (3) பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

    - தன் விவரக் குறிப்பு (Bio data)
    - திருமுழுக்கு மற்றும் உறுதி பூசுதல் சான்றிதழ்
    - திருமணச் சான்றிதழ் மற்றும் அவரது வாழ்க்கை நிலையைக் காட்டும் வேறு ஆவணங்கள்
    - நல்ல உடல் நிலை, மனநிலை, உளவியல் நிலை பற்றி தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து சான்றிதழ்கள்
    - உறுப்பினர் நிரந்தர திருத் தொண்டராக இருந்தால் அவரது ஆயரிடமிருந்து எழுத்துப் பூர்வமான அனுமதிக் கடிதம்

113. **தொடக்கப் பயிற்சி** :

அனுமதியும், பயிற்சிக்கால அளவையும் பொறுத்த அளவில், சபையின் சட்ட ஒழுங்குகள் எண் 65-71 வரை உள்ள அம்சங்களைப் பின்பற்ற வேண்டும்.

114. **பயிற்சி நிலை** :

திருமணத் தம்பதியர் தங்களையே இயேசுவுக்கு முழுமையாக அர்ப்பணித்து, ஆவியானவரின் பேருண்மைகளையும், நற்செய்தி மதிப்பீடுகளையும், முழுமனதோடு தேர்ந்து தெளிந்து தங்களையே அர்ப்பணிக்கத் தயாரிக்கும் காலத்தைப் பயிற்சி காலம் என அழைக்கின்றோம்.

115. பயிற்சிக்கு வரும் இணை உறுப்பினர்களை ஏற்றுக் கொள்வதற்கு முன் அவர்கள்:

- தங்கள் திருமண வாழ்வை அருட்சாதன முறையில் வாழ்பவர்களாக இருக்க வேண்டும்.
- வேறு எந்த அமைப்பிற்காகவது தங்களைக் கையளித்தவர்களாக இருக்கக் கூடாது.

116. பயிற்சிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் பின்வரும் படிவத்தில் உள்ள கருத்துக்களைப் படித்து உணர்ந்து ஏற்றுக் கொள்கிறோம் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் வாசித்துக் கையொப்பமிட வேண்டும். இரண்டு சாட்சிகளுள் ஒருவர் மாநில இயக்குநர் அல்லது அவரது பிரதிநிதியாக இருக்க வேண்டும். “இன்றைய நாளில் அதாவது (15-01-2020) அன்று முழு மனசுதந்திரத்துடன் இறைத் திருவுளச் சபையில் இணை உறுப்பினராவதற்குரிய பயிற்சியைத் தொடங்குகிறேன். இதன் மூலம் திருஅவைப் பணி வாழ்வை சபை வழியாக இன்றைய உலகின் மத்தியில் பகிர்ந்து வாழ முன் வருகிறேன்”. சபை எனக:குத் தருகின்ற பல்வேறு வாய்ப்பு வசதிகளை எனது புனிதத்துவத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தி வாழ என்னையே முழுமையாக அர்ப்பணிக்கின்றேன். எல்லாம் வல்ல இறைவன் எனக்குத் துணை நிற்பாராக!

117. பயிற்சிக் காலத்தின் கால அளவும், இந்த நிலையில், சபையை விட்டு விலகிச் செல்வது பற்றிய கருத்துக்கள் சபையின் சட்ட ஒழுங்குகள் எண்கள் 76 மற்றும் 77 இல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

118. **அர்ப்பணங்கள்:**

பயிற்சிக் காலத்தின் இறுதியில் உறுப்பினர் தன்னைச் சபையில் இணை உறுப்பினராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மாநில இயக்குநரிடம் எழுத்துப் பூர்வமாக விண்ணப்பிப்பார். இவரது விண்ணப்பத்தை மாநில ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி ஏற்றுக் கொள்ளும் உரிமை மாநில இயக்குநருக்கு மட்டுமே உரியது.

உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆணோ அல்லது பெண்ணோ சபையின் அனைத்து உரிமைகளிலும் பங்கு பெறுகிறார். முழு உறுப்பினருக்குத் தரப்பட்ட உரிமைகளில் மாறுபட்ட நிலையில் உள்ளவைகள் தவிர மற்ற அனைத்திலும் பங்கு பெறுகிறார்.

119. சபையின் சட்ட ஒழுங்குகளுக்கு ஏற்ப கீழ்படிதல், ஏழ்மை, கற்பு வார்த்தைப்பாடுகள் வழியாக இணை உறுப்பினர், சபையின் ஆன்மீகத்திற்கு ஏற்ப முழுமைத் தன்மையை பெறவும், பிறருக்குத் தங்களால் இயன்ற உதவியை, தனது மேலதிகாரிகளின் வழிகாட்டுதலின்படி செய்யவும் முன் வருகிறார்.

120. அர்ப்பணம் ஆண்டிற்கு ஒரு முறைக்கானது. அது மீண்டும் புதுப்பிக்கக்கூடியது. ஆண்டு தோறும் புதுப்பித்தாலும் முதல் அர்ப்பணத்திலிருந்து தொடர்ந்து இயேசுவுக்குத் தன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

121. இணை உறுப்பினர்களுடைய அர்ப்பணம், பிற வார்த்தைப் பாடுகளைப் போல இல்லையென்றாலும் சபை ஒழுங்கு எண்கள் 81-84 குறிப்பிடுவன இணை உறுப்பினர்களுக்கும் பொருந்தும். அர்ப்பணம், என்பதற்கு பதிலாக வாக்குறுதி என்றும் துறவி என்பதற்கு பதிலாக இணைந்து செயலாற்ற என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தலாம்.

122. **நிரந்தரத் தன்மை:**

5 ஆண்டுகள் அர்ப்பண வாழ்வுக்குப் பின் நிரந்தர உறுப்பினராகும் நிலை வழங்கப்படும்.

- ஆணோ, பெண்ணோ மாநிலப் பொறுப்பாளரிடம் விண்ணப்பித்துக் கேட்க வேண்டும்.
- மாநில ஆலோசனைக் குழு விண்ணப்பத்தை ஆய்வு செய்து மத்திய ஆலோசனைக் குழுவுக்குப் பரிந்துரைக்க வேண்டும்.
- மத்திய ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியபின் உறுப்பினர் நிரந்தர இணை உறுப்பினராக சபையில் இணைக்கப்படுகிறார்.

123. இணை உறுப்பினர்களுக்குச் சபையில் நிரந்தரத் தன்மை பின்வரும் வார்த்தைகளில் வழங்கப்படும்.

“இறைத் திருவுளச் சபை (பெயர்) என்ற நபரோடு சேர்ந்து எல்லாம் வல்ல இறைவனுக்கு மகிழ்ச்சியோடு நன்றி கூறுகிறது. இணை உறுப்பினராக (5) ஆண்டுகள் சபையில் அர்ப்பண வாழ்வு வாழ்ந்த அவரை நிரந்தர உறுப்பினராக ஏற்றுக் கொள்ள சம்மதிக்கிறது”.

124. **சபையிலிருந்து விலகுதல் தொடர்பாக :**

இணை உறுப்பினர் தனது அர்ப்பண வாக்குறுதியின் ஆண்டின் இறுதியில் தகுந்த காரணங்கள் இருந்தால் அவற்றைத் தங்களது பொறுப்பாளரிடம் கூறிவிட்டு சபையை விட்டு விலகிக் கொள்ளலாம். அதேபோல தகுந்த, பொறுத்தமான காரணங்களுக்காகப் போதுமான எச்சரிக்கைகள் கொடுத்த பின்பும், உறுப்பினரிடம் முன்னேற்றம் இல்லையென்றால், மாநில இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவின் ஒப்புதலோடு, நிரந்தர உறுப்பினராக இல்லை என்றால் அவரது வாக்குறுதியைப் புதுப்பிக்க அனுமதி மறுக்கலாம் (எண் 91)

125. நிரந்தரத் தன்மை பெற்ற இணை உறுப்பினர்கள் வெளியேறவோ அல்லது வெளியேற்றப்படவோ பொருத்தமான காரணங்கள் வேண்டும். சான்றாக:

(1) இயற்கை விதிக்கு மாறாக நடந்து கொள்தல்

(2) சபையின் இணை உறுப்பினரான நபர் தன் அழைப்புக் மாறாக, நம்பகத் தன்மைக்கு எதிராக செயல்படுதல்

- தனது திருமண வாழ்வில் பிரமாணிக்கமின்மை
- தன்னால் முடிந்த அளவுக்கு, சபையின் பொறுப்பாளர்கள் குறிப்பிடுகின்ற சிறிதளவு பண உதவியாவது செய்யாமல் இருப்பது.
- கீழ்ப்படிதல் என்னும் வாக்குறுதியின் பெயரால் கொடுக்கின்ற கட்டளைகளுக்குப் பணிய மறுப்பது.

மேற்கண்ட சூழல்களில் மாநில இயக்குநர் அவருக்குக் கடுமையான எச்சரிக்கை இரண்டு முறை விடுத்த பின்பும் எந்த வித மாற்றமும் இல்லையென்றால் இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் எழுத்து மூலம் எச்சரிக்கை விடுக்கலாம்.

இரண்டு எச்சரிக்கைகளுக்குப் பின்பும், தொடர்ந்து தவறு செய்து கொண்டே இருந்தார் என்றால் மாநிலக் குழுவின் துணையோடு அவரை வெளியேற்றுவதற்கு மறைமுகமான வாக்கெடுப்பின் மூலம் முடிவெடுத்து, தன் முடிவை மத்திய ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பி வைப்பார். இவர்களும் வெளியேற்றும் முடிவை உறுதி செய்தால் சபை இயக்குநர் அவருக்கு எழுத்து மூலம் தெரிவிப்பார்.

திருமணத் தம்பதியருள் யாராவது ஒருவர் வெளியேற்றப்பட்டால் மற்றவர் தொடர்ந்து இணை உறுப்பினராகச் செயல்படுவதில் எந்தத் தடையும் இல்லை.

மேற்கண்ட வழி முறைகளைக் கையாளும் போது சபை ஒழுங்குகள் எண் 94 இல் குறிப்பிடப்பட்ட அனைத்துக் கருத்துக்களையும் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

### இயல் - IV : இணை உறுப்பினர்களின் பயிற்சிக் காலம்

126. இணை உறுப்பினர்களின் பயிற்சி முறையானது, பயிற்சிக்கால பொதுவான நடைமுறைகள் என்னும் பொருளில் சபை ஒழுங்குப் புத்தகம் எண்கள் 21 முதல் 31 வரை கொடுக்கப்பட்டுள்ள அம்சங்களைக் கடைப் பிடிக்க வேண்டும்

127. இணை உறுப்பினர்கள் போதுமான அளவு அவர்களது திருமண உறவு சார்ந்த ஆன்மீகத்தை இறைவார்த்தையின் பின்னணியிலும், திரு அவையின் படிப்பினைகளின் அடிப்படையிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதில் மாநில இயக்குநரும் அவரது ஆலோசனைக் குழுவும் தனிக்கவனம் எடுத்துச் செயல்பட வேண்டும்.

### இயல் - V : இணை உறுப்பினர்களின் நோய் மற்றும் இறப்பு

128. நமது சபையின் பிறருக்கு உதவி புரிய வேண்டும் என்ற பெரும் பண்பின் அடிப்படையில் நோயுற்ற இணை உறுப்பினர்கள் அனைவருக்கும் நம்மால் முடிந்த அளவு பொருளுதவியும் மற்றும் துன்பத்தை கிறிஸ்துவின் மனநிலையோடு ஏற்றுக் கொள்ளும் ஆன்மீகப் பயிற்சியும் வழங்க வேண்டும்.

129. இணை உறுப்பினர் இறக்கும் தருவாயில் இருந்தால் இந்த நிலையைக் குழுத் தலைவரோ அல்லது பகுதி ஒருங்கிணைப்பாளரோ நயமான பாணியில் அவருக்குப் புரியும் விதத்தில் எடுத்துரைத்து, அவரது வாழ்வை தகனப் பலியாகக் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என அறிவுறுத்தி, நோயில் பூசுதல் என்னும் அருட் சாதனத்தை அவர் தகுந்த தயாரிப்புடன் பெறுமாறு செய்ய வேண்டும்.

# பகுதி – 4

# சபையின் நிர்வாக அமைப்பு

# இயல் - I :
# அதிகாரம் பணிபுரிவதற்கே

130. இறைத் திருவுளச் சபை மாநிலங்களாகவும், பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. எதுவாக இருந்தாலும் உறுப்பினர்கள் சபையில் குழுவாக வாழ்ந்து, தங்களது எடுத்துக்காட்டான வாழ்வால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், திரு அவைக்குப் பணிபுரிவதும் தான் அடிப்படை என்பதை மறக்கக் கூடாது. கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற அனைவரும் இணைந்து, அவரவருக்குத் தரப்பட்ட தனிவரத்தைப் பயன்படுத்தி சபையின் ஆன்மீக வழியில் செயல்படுவதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

இத்தகைய மனநிலையில் தான், ஒவ்வொரு பொறுப்பாளரும் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு தனிப்பட்ட நபரிடமும், குழுவிடமும் கடவுள் என்ன விரும்புகிறார் என்பதை தேர்ந்து தெளிந்து நம் சபையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, திரு அவைக்கும், சபைக்கும் பணி புரிய அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதைத் தெளிவாகக் கண்டுணரவேண்டும். இதன் பின்னணியில் நமது அதிகாரம் என்பது இடைநிலையாளரைப் போல அமைந்து நமது சொந்த விருப்பத்தை அல்ல கடவுளின் திருவுளத்தையே அறிந்து அதைச் செயல்படுபவர்களாக இருக்க வேண்டும்.

131. கடவுளின் திருவுளத்தை உறுப்பினர்கள் அனைவரும் தேர்ந்து தெளிய நமக்குத் தரப்பட்ட அதிகாரப் பொறுப்பை நன்கு உணர்ந்து அனைத்திலும் கடவுளின் திருவுளத்தையே காண வேண்டும். பொறுமையையும், சகோதர அன்பையும் எப்போதும் நம் மனதில் கொண்டு ஒவ்வொரு உறுப்பினருக்கும் பயன் தரும் விதத்தில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். சகோதர அன்பையும், ஒற்றுமையையும் மனதில் கொண்டு, நம் அப்போஸ்தலிக்க பணி வாழ்வில் அனைவரும் இணைந்து ஒரே மனத்துடன், தோழமை உணர்வில் பணியாற்றி நமது சபையின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.

132. உறுப்பினர் அனைவரும் தங்களை முழுவதும் கையளித்து, பொறுப்புடன் பணிந்து, தங்களிடம் உள்ள அனைத்து ஆற்றல்களையம், திறமைகளையும் பயன்படுத்தி தங்களது அப்போஸ்தலப் பணியை மிகச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும்.

ஒவ்வொருவரும் மாண்போடு வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து, தங்கள் அதிகாரத்தை பிறர் மீது காட்ட வேண்டும் என்ற மனநிலையை அகற்றிவிட்டு, திறந்த உள்ளத்தோடு, நட்புடன் பணியாற்றும் போதுதான் நம்மிடம் கொடுக்கப்பட்ட அதிகாரம் பணி வாழ்வாக மாறுகிறது.

மாறுபட்ட கருத்துக்கள் எழும்போது உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை மேலதிகாரிகளிடம் எடுத்துரைக்கலாம் என்ற நிலையிலும், தங்கள் அதிகாரப் பொறுப்பாளர்களிடம் பணிவுடனும், கீழ்படிதலுடனும் செயல்பட வேண்டும். அப்போதுதான் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி பொது நலம் காக்க முடியும் என்பதை உணர வேண்டும்.

# இயல் - II :
# சபையில் அதிகார நிலை

133. இறைத் திருவுளச் சபையின் முதல் தலைவர் நம் திருத்தந்தை தான். எனவே உறுப்பினர்கள் அனைவரும் நம் திருத்தந்தைக்குப் பணிவும், கீழ்படிதலும் செலுத்த வேண்டும்.

நம் திருச்சபையின் சட்ட விதிகளின் படி எல்லா உறுப்பினர்களும் அந்தந்த தலத் திரு அவை ஆயர் அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள்

134. சபையில் அதிகாரப் படிநிலை பின்வருமாறு

- பொது இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழு
- மாநில இயக்குநர்கள் மற்றும் அவரது ஆலோசனைக் குழு
- பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்

135. பொது இயக்குநரும், மாநில இயக்குநரும் தலைமை அதிகார பொறுப்புக்குரியவர்கள். சிறப்பாக மேலதிகாரம் (சிறப்பு அதிகாரம்) தகுந்த விதிகளின் படி கூட்டப்பட்ட பொதுப் பேரவைக்குத் தான் உரியது. இதே போல மாநில அளவிலும் தகுந்த விதத்தில் கூட்டப்பட்ட மாநிலப் பேரவைக்குத் தான் உண்டு.

136. பொது இயக்குநரும். மாநில இயக்குநரும் தங்களின் மதி நுட்பத்துடன் திருச்சபையின் சட்ட விதிகளின்படியும், சபையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டும் சபையின் அனைத்துப் பணிகளிலும், அனைவரின் நலனையும்,

கடவுளின் திருவுளத்தைத் தேர்ந்து தெளிவதிலும் பொறுமையும், சகோதர உணர்வும் கொண்டு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் உரிமை உண்டு

# இயல் - III :
# பொதுப் பேரவை

137. De Jure, பொது இயக்குநரையும் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவையும் தேர்ந்தெடுப்பதற்கும், சபையில் உள்ள சில முக்கியமான சிக்கல்கள் மற்றும் இன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப பணிகளை ஆய்வு செய்து தேவைப்படின் மாற்றங்கள் செய்து செயல்படுத்தவும் ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுப் பேரவை கூட்டப்படும்.

**பொதுப் பேரவை உறுப்பினர்கள் :**

138.

**பொதுப் பேரவை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டது.**

(1) நிரந்தர உறுப்பினர்கள் (Ex. Official)

- பொது இயக்குநர்
- பொது ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்
- அதிகாரப் பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில இயக்குநர்கள்
- மாநில பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள்
- கடந்த பொதுப் பேரவையைக் கூட்டிய இயக்குநர்

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

- அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மாநிலம் அல்லது (பயிற்சி) தேர்வு நிலையில் உள்ள மாநிலம் இவற்றிலுள்ள அர்ப்பண உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்ட அர்ப்பண உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஈடுபாடுள்ள இணை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இணை உறுப்பினர்களின் பிரதிநிதிகள்.
- பிரதிநிதிகளைத் தேர்வு செய்யும் போது பொதுப் பேரவையின் அமைப்பை மனதில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் தக்க அனுபவமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் இணை உறுப்பினர்களின் எண்ணிக்கை அர்ப்பண உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

139. பொது இயக்குநரின் செயலர் மற்றும் சேவைகளின் செயல்பாட்டு இயக்குநர் ஆகிய இருவரும் பொதுப் பேரவையிலோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலோ அவர்கள் இடம் பெறவில்லையென்றால், அவர்கள் சார்ந்த துறைகளைப் பற்றி எழும் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்க அவர்கள் பொதுப் பேரவையில் கலந்து கொள்ள அழைக்கப்படலாம் ஆனால் வாக்களிக்கும் உரிமை இல்லை.

140. பொது இயக்குநரோ அல்லது அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்களோ மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றாலும் பொதுப் பேரவை முடியும் வரை அவர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

141. **பொதுப் பேரவை அழைப்பும் அமைப்பும்** :

பொது இயக்குநர் அவர்களுக்கு வழங்கப்பட்ட தனி அதிகாரத்தின் படி (De Jure) பொதுப் பேரவையைக் கூட்ட அதிகாரம் உண்டு. ஒருவேளை பொது இயக்குநர் இல்லையென்றால் துணை பொது இயக்குநர் பேரவைக்கு அழைப்பு விடுக்கலாம்.

142. பொது இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி அவர்தான் பொதுப் பேரவையின் தலைவர். ஒரு வேளை அவர் விரும்பினால், பொதுப் பேரவை காலத்திற்கு மட்டும் மற்றொரு தலைவரைத் தேர்வு செய்யும் அதிகாரத்தை பொதுப் பேரவையிடம் விட்டு விடலாம். இச் சமயங்களில் சபையின் சட்ட விதிகள் எண்கள் 155. 156 மற்றும் 161 ஆகியவற்றை மனதில் கொள்ள வேண்டும்.

143. பொதுப் பேரவை தேர்வோடு தொடங்கும். பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும். செயலரின் முக்கியப் பணியானது

என்னவென்றால் பொதுப் பேரவையின் செயல்பாடுகளைத் தவறாமல் குறிப்பெடுத்துப் பதிவு செய்ய வேண்டும்.

144. **இடை நிலைப் பேரவை :**

தேவைப்பட்டால் மூன்று ஆண்டுக்கு ஒரு முறை ஆலோசனைக்காக மட்டும் இடை நிலைப் பேரவையைக் கூட்டலாம். பொது இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவினர் அதிகாரப் பூர்வமாக தேர்வு செய்யப்பட்ட மாநில இயக்குநர்கள், மாநில பயிற்சி ஒருங்கிணைப்பாளாகள் மற்றும் முன்னாள் தலைமை இயக்குநர் இதன் உறுப்பினர்கள்.

ஆன்மீக வாழ்வு, சபையின் அப்போஸ்தலப் பணிகள், பயிற்சி மற்றும் குறிப்பிட்ட சிக்கல்கள் ஆகியன பற்றி எழும் கேள்விகள். சிக்கல்கள் இவற்றிற்கு விளக்கம் காண்பதற்காக மட்டுமே இடை நிலை பேரவை கூட்டப்பட வேண்டும்.

வேறு ஏதாவது உறுப்பினர்களை இந்த இடைநிலைப் பேரவைக்கு அழைக்க வேண்டுமென்றால் அதை பொது ஆலோசனைக் குழுதான் முடிவு செய்ய வேண்டும்.

145. **பொதுப் பேரவைக்கு முன் வைக்கப்பட வேண்டிய அறிக்கைகள் :**

பொதுப் பேரவை பின்வரும் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும்

(1) இன்றய சபையின் நிலையைப் பற்றி எழுத்து வடிவில் தரப்படும் பொது இயக்குநரின் அறிக்கை

(2) சேவைகளின் செயல்பாட்டு இயக்குநர் தருகின்ற சபையின் பொருளாதார நிலை பற்றிய அறிக்கை.

(3) பயிற்சி இயக்குநர் கடந்த பொதுப் பேரவையிலிருந்து இந்நாள் வரை செய்த பணிகளைப் பற்றிய தெளிவான அறிக்கை, மற்றும் சபையிலும், திரு அவையிலும் பணி வாழ்வை மேம்படுத்த வழங்கும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை.

(4) அதிகாரப் பூர்வமாக தேர்வு செய்யப்பட்ட மாநில இயக்குநர்கள் மற்றும் தேர்வு நிலையில் இருக்கும் மாநிலத்தின் இயக்குநர்கள் தங்களது மாநிலத்தின் செயல்பாடுகளையும், நிதி நிலை பற்றிய அறிக்கையும் தரப்படல் வேண்டும்.

146. **பொதுப் பேரவையில் கலந்துரையாட வேண்டிய கருத்துக்கள் :**

(1) திருத்தந்தையவர்கள் உலகியல் துறவறசபை பற்றி தந்த புதிய கருத்துக்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் நம் சபையின் சட்ட திட்டங்களையும். ஒழுங்குகளையும் போதிய அளவு மாற்றியமைக்க கலந்துரையாடி முடிவெடுக்கலாம்.

(2) நமது சபையின் ஒழுங்குகளை வரைமுறைப்படுத்த அல்லது காலத்தின் மாற்றத்திற்கேற்ப சில மாற்றங்களைச் செய்து இதன் மூலம் நம் சபையானது ஆக்கப் பூர்வமான பணிகளில் ஈடுபட்டு இன்னும் சாட்சிய வாழ்வு வாழ தீர்மானித்து முடிவெடுப்பது.

(3) பொது இயக்குநர் மற்றும் மாநில இயக்குநர்கள் முன் வைக்கின்ற திட்டங்களுக்கு அனுமதியும். பொருளுதவியும் அல்லது சில தனிப்பட்ட செலவுகளுக்கு அனுமதியும் வழங்குவது அல்லது அவர்களது ஆலோசனைக் குழுவின் உதவியோடு முடிவெடுக்க அனுமதிப்பது.

(4) பொதுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட சில பரிந்துரைகளை ஆய்வு செய்து தேவைப்படின் அவற்றிற்கு அனுமதி அளிப்பது.

(5) நமது சபையின் தலைமையிடத்தை மாற்றம் செய்தல் தொடர்பாக முடிவெடுத்தல். இத்தருணங்களில் நாம் செயல்பட்டுவரும், செயல்படப்போகும் தலத் திரு அவைத் தலைவர்களின் அனுமதியும் பெற வேண்டும்.

(6) நமது சபையின் வரவு செலவுக் கணக்கை ஆய்ந்து ஒப்புதல் அளித்தல்.

(7) ஒவ்வொரு பயிற்சிதளத்தைப் பற்றி ஆய்வு செய்து, தேவைப்பட்டால் பரிந்துரைகளை அல்லது மாற்றங்களை வழங்குவது.

147. குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவை தவிர மற்ற அனைத்துக் கருத்துக்களிலும் பெரும்பான்மையின் அடிப்படையில் தான் முடிவுகள் எடுக்கப்படும். இணை உறுப்பினர்களின் பிரதிநிதிகள், பேரவையில் கலந்து கொள்ள அதிகார வரம்புக்குள் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், இணை உறுப்பினர்களின் வாழ்வு நிலைச் சிக்கல்களைக் குழுவாகச் சந்திப்பதையோ அல்லது தனிப்பட்ட ஒருவரால் சந்திக்கின்ற சிக்கல்களைப் பற்றிய கலந்துரையாடல், நேரடியாகவோ, மறைமுகமாகவோ பேசும் நிலை எழுகின்ற போது. இணை உறுப்பினப் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். சபையின் தனிப்பட்ட வரத்தைப் பற்றிய அனைத்துக் கருத்துக்களிலும் மற்றும் அனைத்து கருத்துப் பரிமாற்றங்களிலும் அவர்கள் கலந்து கொண்டு தங்களது ஆலோசனைகளை வழங்கலாம் ஆனால் அவர்களுக்கு வாக்கு உரிமை கிடையாது.

148. சபையின் சட்ட ஒழுங்குகளை மாற்றியமைக்கவோ அல்லது விளக்கங்களைச் சேர்க்கவோ பொதுப் பேரவைக்கு அதிகாரம் உண்டு. எதாவது மாற்றங்களோ, அல்லது புதிய விளக்கங்களோ வாக்கெடுப்பின் மூலம் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெற்று இறுதியில் திருத்தந்தையின் அங்கீகரித்தலுக்குப் பின்தான் அது செயல்பாட்டுக்கு வரும்.

149. பொதுப் பேரவை சபை முழுவதற்கும் புதிய சட்ட திட்டங்களை வகுக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் அத்தகைய தருணங்களில் அந்த புதிய சட்ட நடவடிக்கைகள் திரு அவையின் சட்ட திட்டங்களுக்கோ அல்லது சபையின் சட்ட ஒழுங்குகளுக்கு மாறுபட்டதாகவோ இருக்கக் கூடாது.

150. **தேர்வு முறை:**

பொது இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவினர் பொதுப் பேரவையின் இறுதியில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

151. பொது இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட இருப்பவருக்குரிய தகுதிகள்

- 35 வயதை நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்
- குறைந்தது 5 ஆண்டுகளாவது நிரந்தர உறுப்பினராக சபையில் இருந்திருக்க வேண்டும்
- குருவாக இருக்க வேண்டும்

தேர்ந்தெடுக்கப்படும் நபர் தீர்க்கமான முடிவு எடுப்பவராகவும், நல்ல குணநலன்களை உடையவராகவும், மதிநுட்பமும் மற்றும் திரு அவை, சபை இவற்றின் மீது மிகுந்த பற்று உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

152. பொது இயக்குநரை தேர்வு செய்வதற்குப் பொறுப்பாளராக, பொது இயக்குநராகத் தேர்வு செய்வதற்கு விருப்பம் இல்லாத உறுப்பினர்களுள் ஒருவரை பேரவை பெரும்பான்மை வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்ய வேண்டும். பேரவையின் இளம் உறுப்பினர்களில் இருவர் இந்த நடைமுறையைக் கவனிப்பவர்களாக இருக்கலாம். தேர்வு பொறுப்பாளரும், நடைமுறையைக் கவனிப்பவர்களும் வாக்களிக்கும் உரிமை உடையவர்கள்.

153. பொது இயக்குநர் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். முதலில் நடைபெறும் மறைமுக வாக்கெடுப்பின் மூலம் பெரும்பான்மை வாக்குகள் பெற்ற ஒரு சில உறுப்பினர்களைத் தேர்வு செய்யலாம். இது இவ்வதிகார பொறுப்புக்கு முன் வரும் நபர்களின் தாக்கல் மனுவாக ஏற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் பொதுப் பேரவையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களது தாக்கல் மனுவை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின் தேர்வு நடைபெறும்.

154. முதல் வாக்கெடுப்புச் சுற்றின் போது, பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லையென்றால் மறுவாக்கெடுப்பு தேவைப்படும். இரண்டாவது சுற்றிலும் பெரும்பான்மை கிடைக்கவில்லையென்றால் மூன்றாவது வாக்கெடுப்பிற்குச் செல்ல வேண்டும்.

மூன்றாவது சுற்றிலும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லையென்றால் அதிக வாக்குகள் பெற்ற இரண்டு உறுப்பினர்களை மட்டும் தேர்வு செய்து அதன்பின் வாக்கெடுப்பிற்குச் செல்ல வேண்டும்.

நான்காவது வாக்கெடுப்புச் சுற்றில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் ஐம்பது சதவீதத்திற்கு மேல் (50%) வாக்குப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

நான்காவது வாக்கெடுப்பில் இருவரும் சரிசமமான (50% - 50%) வாக்குகள் பெற்றால் அவர்களுள் அர்ப்பண வாழ்வில் அதிக ஆண்டுகள் வாழ்ந்தவரை தேர்வு செய்ய வேண்டும். அதிலும் இருவருடைய அர்ப்பண ஆண்டும், ஒரே ஆண்டாக இருந்தால் அவர்களது வயதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய தகுதிகளை எந்த உறுப்பினரும் நிறைவு செய்யவில்லையென்றால் (எண் 53) மீண்டும் தேர்வு முறை தேவைப்படின் சற்று இடைவெளிக்குப் பின் மீண்டும் தொடங்கப்பட வேண்டும்

155. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொது இயக்குநர் பேரவையில் இல்லையென்றால் அவர் வரும் வரை பேரவை நிறுத்தி வைக்கப்பட வேண்டும். ஒரு வேளை அவரால் பங்கு கொள்ள முடியாத சூழல் என்றால் பேரவையில் உள்ள ஒரு நபரை அவரது பதிலாளாய் அவர் நியமிக்கலாம்.

156. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது இயக்குநர் அல்லது அவரது பிரதிநிதியின் தலைமையில் ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் தேர்வு நடைபெறும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் ஒருவர் துணைப் பொது இயக்குநராகத் தேர்வு செய்யப்படுவார். இந்தத் தேர்வானது, பொது இயக்குநர் தேர்வுக்குக் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகளே பின்பற்றப்படும். (எண் 151)

157. ஆலோசனைக் குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்படுவோர் குறைந்தது 30 வயது உடையவராக இருக்க வேண்டும் மற்றும் சபையின் நிரந்தர உறுப்பினராக இருக்க வேண்டும். மேலும் பல்வேறு பணிகளைச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் மட்டும் தான் இத்தகைய நிலைக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சபைக்கும், திரு அவைக்கும் பணி செய்ய கடவுள் கொடுக்கும் மாபெரும் பொறுப்பு என்பதை உணர்ந்து புறக்கணியாமல் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

158. பேரவைச் செயலர், தேர்வு நடைபெற்ற விதம் பற்றிய செய்திகளை அறிக்கையாகத் தயாரித்து அதில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட பொது இயக்குநர் அல்லது அவரது பிரதிநிதி, மற்றும் பேரவைச் செயலர், இரண்டு வழி நடத்துநர்கள் இந்த அறிக்கையில் கையொப்பமிடுவர். இந்த ஆவணங்கள்

அனைத்தும் பத்திரமாக சபையின் ஆவணக் காப்பகத்தில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

159. **பேரவைத் தலைவரின் செயல்பாடுகள் :**

பேரவையின் செயல்பாடுகள் அனைத்தும் பணி நிறைவு செய்யும் பொது இயக்குநர் மற்றும் பேரவைச் செயலர், இரண்டு வழி நடத்துநர்கள் ஆகிய அனைவரும் பொறுப்பேற்று அனைத்துச் செயல்பாடுகளையும் தவறாமல் குறிப்பெடுத்துப் பாதுகாக்க வேண்டும்.

பணி நிறைவு செய்யும் பொது இயக்குநரே பொதுப் பேரவையை முடித்து வைப்பார்.

160. பேரவைத் தீர்மானங்கள் அனைத்தும் சபையின் உறுப்பினர்களுக்கு பொது இயக்குநர் வழியாக அறிவிக்கப்படும். தேவைப்பட்டால் பொது இயக்குநர் இவற்றை மாற்றவோ அல்லது புதிய விளக்கங்கள் தந்தால் ஒழிய பேரவைத் தீர்மானங்களே நடை முறைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

161. ஒரு வேளை பொதுப் பேரவை இரண்டு வாரங்கள் இடைவெளிக்குப் பின் மீண்டும் தொடங்குமென்றால் அக்காலங்களில், புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட பொது இயக்குநர் தனக்கென வழங்கப்பட்ட உரிமைகளின் படி (எண் 142) செயலாற்றுவார்.

# இயல் - IV :
# பொது இயக்குநர் (சபைத் தலைவர்)

162. பொது இயக்குநர் பொதுப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பணிபுரிவார். இரண்டு முறைக்கு மட்டுமே அவர் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்படலாம். பொது இயக்குநர் தனது பணிக் காலத்தில், தான் எந்த மாநிலத்திலிருந்து வந்தாலும் அந்த மாநில இயக்குநரின் அதிகார வரம்புக்குக் கட்டுப்பட்டவரல்ல.

163. பொது இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி சபை முழுவதையும் திருச்சபைச் சட்டத்திற்கு மாறுபடாமல், சபையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் சபையை வழிநடத்த வேண்டும். அனைத்து அதிகாரங்களும் இவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் சபையின் பழக்க வழக்கப்படி தனக்குக் கீழ் பணியாற்றும் அனைவரின் ஒத்துழைப்போடு செயல்பட வேண்டும். சபையிலுள்ள ஒவ்வொருவர் மீதும் இவருக்குத் தனிப்பட்ட அதிகாரம் உண்டு, சபையின் ஒவ்வொரு நிலையிலும் உள்ள அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள இவருக்கு உரிமை உண்டு. தேவைப்பட்டால் சபையின் பொது இயக்குநர் தனது பிரதிநிதிகளை இத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்ள அனுப்பி வைக்கலாம்.

ஒருவேளை இணை உறுப்பினர்களின் வாழ்க்கைச் சட்டங்களைப் பற்றியோ அல்லது தனிப்பட்ட இணை உறுப்பினரைப் பற்றியோ கலந்துரையாடும் கூட்டத்திற்கு ஈடுபாட்டுடன் உழைக்கும் இணை உறுப்பினரை அனுப்பிவைக்கலாம்.

164. சபையின் ஒழுங்குகள், சட்டதிட்டங்கள், நடைமுறைப் பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தும் தவறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதா என்பதை மிகக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். தவறுகள் ஏற்படும் போதும், கவனம் செலுத்தாமல் திசைமாறும் போதும் விழிப்புடன் செயல்பட்டு இவற்றைக் களைவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

165. இவ்வாறு பணிகளில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் வேறு எந்த தனிப் பொறுப்பும் பொது இயக்குநருக்கு வழங்கக் கூடாது.

166. பொது இயக்குநர் தனது பணிக்காலமான ஆறு ஆண்டுகளில் ஒரு முறையாவது மாநிலத்திற்குச் சென்று உறுப்பினர்களையும் அவர்களது பணிகளையும் ஆய்வு செய்து இன்னும் அதிக ஈடுபாட்டுடன் வாழ துணை புரிய வேண்டும். பொது இயக்குநர் தகுந்த காரணங்களுக்காகப் பயணத்தை மேற்கொள்ள முடியாத தருணத்தில் மட்டும் இவரது பிரதிநிதியை அனுப்பலாம். தேவைப்பட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் மாநிலங்களுக்குப் பயணம் மேற்கொள்ளலாம். சபை முழுவதற்கும் அல்லது மாநிலத்திற்கு மட்டும் சிறப்புப் பார்வையாளரை அனுப்ப விரும்பினால் தனது ஆலோசனைக் குழுவின் அனுமதி பெற வேண்டும்.

167. இப்படி அனுப்பப்படும் சிறப்புப் பார்வையாளர் சபையிலுள்ள அனைவரிடமும் விளக்கம் கேட்க உரிமை உண்டு. இவர் கேட்கும் கேள்விகளுக்கு அனைவரும் உண்மையுடன் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள். எவரும் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதோ, ஒத்துழையாமலோ இருக்கக்கூடாது. இவரது சந்திப்பு பற்றிய அறிக்கையையும் அவருடைய பரிந்துரைகளையும் தனது ஆலோசனைக் குழுவிடம் பொது இயக்குநர் சமர்ப்பிக்க வேண்டும்.

# இயல் - V :
# பொது ஆலோசனைக் குழு

168. பொது இயக்குநரை விடுவித்து பொது ஆலோசனைக் குழுவில் 8 உறுப்பினர்கள் இருப்பார்கள் இவர்களுள் இணை உறுப்பினர்களின் சார்பாக ஒரு தம்பதியரும் இருப்பார்கள்.

பொது ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் பொதுப் பேரவை உறுப்பினர்களால் 6 ஆண்டுகளுக்கு மட்டும் பணிபுரிய தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தொடர்ந்து இரு முறை மட்டுமே ஆலோசனைக் குழு உறுப்பினர்களாகப் பணியாற்ற முடியும்.

ஆலோசனைக் குழுவுக்கு பொது இயக்குநரோ அல்லது துணை இயக்குநரோ தலைமையேற்று கூட்டத்தை நடத்துவார். குறைந்தது 4 உறுப்பினர்களாவது இருந்தால்தான் கூட்டம் நடத்தப்படும்.

169. சபையின் சட்ட ஒழுங்குகளின் படி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், சபையின் ஆட்சியமைப்பின் செயல்பாட்டிற்கும். ஆன்மீக வழிகாட்டுதல்களுக்கும், இன்னும் பல நிலைகளில் சபையை வழி நடத்த பொது இயக்குநருக்குத் துணை புரிய வேண்டும். எனவே இந்த பணிகளில் தடையில்லாமல் பணியாற்ற சபையில் வேறு பொறுப்புக்களை இவர்களுக்குத் தராமல் இருப்பது நல்லது.

170. இதே பணிக்காகத் துணைப் பொது இயக்குநர் பொதுப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பொது இயக்குநர் இல்லாத சமயத்தில் அல்லது அவரால் செயல்பட முடியாமல் இருக்கும் தருணங்களில் மற்றும் அந்த இடம் காலியாக இருந்தால், துணை இயக்குநர் அந்த இடத்தை நிறைவு செய்வார்.

பொது இயக்குநர் இடம் காலியாக இருந்தால் துணைப் பொது இயக்குநர் அந்த இடத்தை நிரப்புவார். சட்ட ஒழுங்குகள் தடுத்தால் ஒழிய பொது இயக்குநருக்குரிய அனைத்து அதிகாரங்களும் அவருக்கு உரியது. ஆலோசனைக் குழுவின் அலோசனைப்படி புதிய இயக்குநர் பொதுப் பேரவை வழியாக தேர்வு செய்யப்படும் வரை சபைக்குத் தலைமைப் பொறுப்பேற்று நடத்துவார்.

12 மாதங்களுக்குள் பொதுப் பேரவையைக் கூட்டி புதிய பொது இயக்குநரை தேர்வு செய்ய தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். புதிய பொது இயக்குநர் தேர்ந்தெடுக்கும் வரை எந்த விதமான புதிய ஒழுங்குகளை ஏற்படுத்தாமல் சபையை வழி நடத்த வேண்டும். தேவைப்படின் சிற்சில மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

171. பொது இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவை ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது அல்லது தேவைக்கு ஏற்ப பலமுறையாவது ஆலோசனைக் குழுவைக் கூட்டி விவாதிக்கலாம்.

பொது இயக்குநர் சில முடிவுகளை எடுப்பதற்குமுன் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெறுவதற்கு பின் வரும் வழிமுறைகளைக் கையாள வேண்டும்

(1) குழுவின் வாக்குகளைப் பெறுவதற்கு

(2) குழுவின் சம்மதம் தேவைப்படின், பெரும்பான்மை உறுப்பினர்களின் சம்மதமின்றி செயல்பட முடியாது.

(3) பொது இயக்குநர். ஆலோசனைக் குழுவின் கருத்துக்களை மட்டும் கேட்க வேண்டுமென்றால், அந்த சமயங்களில் அவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான முடிவுகளை அவர் தனிப்பட்ட முறையில் எடுக்கும் உரிமை உண்டு. பொது இயக்குநர் குழு கூறுகின்ற கருத்துக்களுக்கு தனிக்கவனம் செலுத்த வேண்டுமே ஒழிய அடியோடு புறக்கணிக்கக்கூடாது. சிறப்பாக பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் போது அதை விடுத்து தனிப்பட்ட முறையில் மாறுபட்ட முடிவை எடுக்காமல் தேர்ந்து தெளிந்து செயல்பட வேண்டும்.

172. தீர்மானங்களில் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் முடிவெடுக்கும் போது இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இணை உறுப்பினர்கள் அவர்களுக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின்படி, கூட்டங்களில் கலந்து கொள்ள உரிமை உண்டு. இணை உறுப்பினர்களின் வாழ்க்கை நிலையைப் பற்றிய கருத்துக்களில் முடிவெடுக்கின்ற தருணங்களில் இவர்கள் அவசியம் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். இத்தகைய கூட்டங்களில் இவர்கள் கூறும் கருத்துகளும், வாக்குகளும் சிறப்பிடம் பெறுகின்றது. மற்ற ஆலோசனைக் கூட்டங்களுக்கு இவர்களை அழைக்கலாம். ஆனால் அதில் முடிவெடுக்கும் வாக்குரிமை அவர்களுக்கு இல்லை.

173. திருஅவைச் சட்டங்களிலும் சபையின் சட்ட ஒழுங்குகளிலும் குறிக்கப்பட்ட இடங்களைத் தவிர பின்வரும் தருணங்களுக்கும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் முடிவெடுக்க வேண்டும்.

(1) பொதுப் பேரவையைக் கூட்டும் நாள். இடம் போன்றவற்றை முடிவு செய்ய

(2) சிறப்புப் பொதுப் பேரவையைக் கூட்ட வேண்டிய தருணத்தில்

(3) இடைப்பட்ட பொதுப் பேரவையைக் கூட்ட வேண்டிய சமயங்களில்

(4) அதிகாரப் பூர்வமாக மாநிலங்களை தோற்றுவிப்பதற்கும், மாற்றியமைப்பதற்கும், ரத்து செய்வதற்கும்

(5) தேர்வுநிலையில் உள்ள மாநிலத்தை தொடங்கவும். தடை (ரத்து) செய்வதற்கும்

(6) சில சிறப்புப் பணிகளைத் தொடங்கவும், உருவாக்கவும். ஏற்றுக் கொள்ளவும், தடை செய்யவும் - தலத் திருஅவை ஆயரின் அனுமதியோடு

(7) மாநிலத்தின் சட்ட திட்டங்களையம். ஒழுங்குகளையும் அனுமதிக்க

(8) பொதுச் செயலாளர் மற்றும் மாநில இயக்குநர் மற்றும் பணிகளின் செயல் அலுவலரைத் தேர்வு செய்யும் தருணங்களில்

(9) பொதுக் குழு உறுப்பினர், பொதுச் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகிய இவர்களின் பணித் துறப்பு வேளைகளில் (இராஜிநாமா)

(10) காலிப் பணி இடத்தில் ஆலோசனைக் குழு உறுப்பினரை தேர்வு செய்து பணியமர்த்தும் போது

(11) திருத் தந்தையின் அனுமதியோடு ஆலோசனைக் குழு உறுப்பினரை நீக்கும் போது

(12) சபை அனைத்திற்கோ அல்லது மாநிலத்திற்கோ சிறப்புப் பார்வையாளரை தேர்வு செய்யும் போது

(13) தேர்வை அங்கீகரிக்க, பணியிலிருந்து விடுவிக்க, பணித் துறப்பை ஏற்றுக் கொள்ள. மாநில இயக்குநர்கள் மற்றும் அவரது ஆலோசகர்கள் இவர்களது பணிக்காலம் நிறைவடைவதற்கு முன் அவர்களது பணித்துறப்பை ஏற்றுக் கொள்ள

(14) பொது இயக்குநர், தேர்வு நிலையில் உள்ள மாநிலத்தின் புதிய பொறுப்பாளரைத் தேர்வு செய்வதற்கு முன் இடைக்கால பொறுப்பாளரைத் தேர்வு செய்யும் போது

(15) அர்ப்பண வாழ்வில் உள்ள உறுப்பினர் அல்லது ஈடுபாட்டுடன் உழைக்கும் இணை உறுப்பினர்கள் இவர்களை மாநிலப் இயக்குநர்

மற்றும் அவரது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைப்படி நிரந்தர உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளும் வேளையில்

(16) மாநிலம் இல்லாத இடங்களில், தொடக்க நிலைப் பயிற்சி. பயிற்சி நிலை, அர்ப்பணவாழ்வு, நிரந்தர உறுப்பினராக ஏற்றுக் கொள்தல் அல்லது சபையிலிருந்து நீக்குதல் போன்ற சமயங்களில்

(17) மாநிலக் குழு பரிந்துரைத்த உறுப்பினரைத் திருத் தொண்டர் நிலைக்கோ அல்லது குருத்துவ அருட் பொழிவுக்கோ அனுமதி வழங்கும் போது

(18) நிரந்தர உறுப்பினராக ஏற்றுக் கொண்ட குருவை நம் சபையில் இணைத்துக் கொள்ள

(19) சபை ஒழுங்குகள் 91, 92, 125 இவற்றைப் பின்பற்றி உறுப்பினரை சபையிலிருந்து நீக்கும் வேளையில்

(20) மாநிலக் குழு ஏற்கனவே அர்ப்பண நிலையில் உள்ள, ஈடுபாட்டுடன் வாழும் இணை உறுப்பினர்களை ஏற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்க

(21) செயல்பாட்டுப் பணிகளின் இயக்குநர் தரும் வரவு செலவு அறிக்கைகளை அனுமதிக்க

(22) சபையின் ஆண்டிற்கான வரவு செலவு கணக்குகளுக்கு ஒப்புதல் வழங்க

(23) செயல்பாட்டு பணிகளின் இயக்குநர் மற்றும் மாநில இயக்குநர்கள் பொதுப் பேரவை அனுமதித்த அளவுக்கு மேல் ஏற்பட்ட செலவினங்களுக்கு ஒப்புதல் வழங்க

(24) மாநில இயக்குநரின் அதிகாரவரம்புக்கு மேல் உள்ள சபையின் சொத்துக்களை விற்க அனுமதி வழங்க. திரு அவையின் அதிகாரிகளின் அதிகார வரம்புக்கு மேல் உள்ள மதிப்பு மிக்க பொருட்களையோ, சொத்துக்களையோ பிறருக்கு மாற்றிக் கொடுக்கு முன், பொதுக் குழுவின் தீர்க்கமான வாக்கெடுப்புக்குப் பின், தகுந்த பொறுப்பாளர்களின் முன் அனுமதிக்குப் பின் தான் செயல்படுத்த வேண்டும்

(25) செயல்பாட்டுப் பணிகளின் இயக்குநர் மற்றும் மாநில இயக்குநர்களின் அதிகார வரம்புக்கு மேற்பட்ட செலவினங்களுக்கு ஒப்புதல் வழங்க. இத்தகைய செலவினங்கள் திரு அவையின் அதிகார வரம்புக்கு மேல் அதிகமாக இருந்தால் அதற்குரிய பொருத்தமான அதிகாரிகளிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும்.

(26) செயல்பாட்டு பணிகளின் இயக்குநர் மற்றும் மாநில இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்புக்குமேல் பணத்தை சேமிக்கவோ அல்லது மாற்றவோ விரும்பும் போது

(27) சபையின் ஒழுங்கு எண் 188 ஐ மீறாமல் நன் கொடைகளையோ, அடமானப் பொருட்களையோ ஏற்றுக் கொள்ளும் தருணத்தில்

(28) பொது செயல்பாட்டு இயக்குநர் தருகின்ற வரவு செலவு கணக்குகளை ஏற்றுக் கொள்ளவும், சபையின் பல்வேறு பணிகளுக்குப் போதுமான பண உதவியைப் பெற்று பகிர்ந்து கொடுப்பதற்கும் மற்றும் தேவையான மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கும் உரிய சூழல்களில்

(29) மாநில வரவு செலவு திட்டங்களை ஆய்வு செய்து தேவைப்படின் மாற்றங்களைச் செய்து ஒப்புதல் தரும் போது.

174. சபை ஒழுங்கு எண் 173.2, 4, 5, 7, 8, 10, 11, 13, 15, 16, 17, 18 மற்றும் 22 இல் குறிப்பிடப்பட்ட அம்சங்களில் முடிவெடுக்க வேண்டுமென்றால் குறைந்தது 6 உறுப்பினர்களாவது முடிவெடுக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

175. சட்ட ஒழுங்குகளின்படியும், திரு அவை சட்ட விதிகளின் படியும் ஏதாவது ஒரு உறுப்பினர் தனது அர்ப்பண வாழ்வு, வார்த்தைப்பாட்டு வாழ்வு, நிரந்தர உறுப்பினராக ஏற்றுக் கொள்தல் போன்றவற்றில் மாநிலக் குழு அனுமதி மறுத்தாலோ அல்லது தள்ளி வைத்தாலோ இத்தகைய சமயங்களில் உறுப்பினர் பொது இயக்குநருக்கு முறையீடு செய்தால், இத்தகைய தருணங்களில் பொதுக் குழுவின் ஆலோசனை வாக்கு அவசியமாகும்.

176. திரு அவைச் சட்டமோ அல்லது சபை ஒழுங்குகளோ ஆகியவற்றின் தலையீடு இல்லாத தருணங்களில் பொது இயக்குநர், பொதுக்குழுவின் தீர்க்கமான அல்லது ஆலோசனை வாக்கோ இல்லாமல் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்கும் உரிமை உண்டு. ஆனால் சிக்கலான அல்லது முடிவு பல விளைவுகளை ஏற்படுத்தும் நிலை இருப்பதாக உணர்ந்தால் அத்தகைய தருணங்களில் சபையின் பொதுக் குழுவின் ஆலோசனையும். பரிந்துரையும் பெற்று செயல்படுவது தான் மிகச் சிறந்தது.

177. பொது இயக்குநர் தன் ஆலோசனைக்குழுவின் வழிகாட்டுதல்களோ அல்லது வாக்குகளின் அடிப்படையில் முடிவோ எடுக்க வேண்டுமென்றால், இந்த சமயங்களில் எடுத்துக் கொள்ளப்படும் பிரச்சனை பற்றித் தெளிவான விவரங்களையும், விளக்கங்களையும் அதற்குரிய ஆதார ஆவணங்களையும் மிகத் தெளிவாகக் கொடுக்க வேண்டும். அதே வேளையில் குழு உறுப்பினர்களும் நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும், உண்மையுடனும் தங்கள் மனசாட்சிக்கு உகுந்த விதத்தில் தங்கள் கருத்துக்களையும். வாக்குகளையும் தர வேண்டும்.

178. ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தெளிவுடனும், மதிநுட்பத்துடனும் செயலாற்ற வேண்டும். குழுவில் கலந்துரையாடுகின்ற கருத்துக்களையும்,

நிகழ்வுகளையும் மற்றும் தங்களுடைய பணியின் தொடர்பான அனைத்து செயல்களையும் பொறுத்த அளவில் இரகசியத் தன்மை காக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் வெளியில் பகிரக் கூடாது. அப்படி மீறி யாராவது வெளியில் தெரிவிப்பதாகத் தெரிய வந்தால் அவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு மீண்டும் அது தொடராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

179. குழுவில் எடுக்கப்படும் முடிவுகளை தேவைப்படின் குறிப்பிட்ட காலத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டும் மற்றும் அதன் செயல்பாடுகளையும் கவனித்து வழி நடத்த வேண்டும்.

180. ஆலோசனைக் குழுக் கூட்ட செயல்பாடுகள் அனைத்தும் பொதுச் செயலாளர் அவர்களால் இதற்கென்ற உரிய பதிவேட்டில் குறிப்பு எடுக்கப்பட்டு, அந்த குறிப்புகளுக்கு இறுதியில் பொது இயக்குநர் மற்றும் அனைத்துக் குழு உறுப்பினர்களிடமும் கையெழுத்துப் பெற வேண்டும்.

# இயல் - VI :

# பொதுச் செயலாளர் மற்றும் பணிகளின் செயல்பாட்டு இயக்குநர்

181. பொதுச் செயலாளர், பொது இயக்குநர் அவர்களால் அர்பண உறுப்பினரையோ அல்லது ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் ஒருவரையோ தேர்வு செய்வார். பணிகளின் செயல்பாட்டு இயக்குநரை, பொது இயக்குநர் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து தேர்வு செய்வர். இவர் அர்ப்பண உறுப்பினராகவோ அல்லது ஈடுபாட்டுடன் செயல்படுகின்ற இணை உறுப்பினராகவோ இருக்கலாம். இவர் ஆலோசனைக் குழுவைச் சார்ந்தவராகவும் அல்லது சாராதவராகவும் இருக்கலாம்

182. பொதுச் செயலாளர் மற்றும் பணிகளின் செயல்பாட்டு இயக்குநர் இவர்களின் பணிக்காலம் மூன்று ஆண்டுகள் இவை மீண்டும் புதுப்பிக்கப்படலாம்.

183. பொது இயக்குநர் மற்றும் ஆலோசனைக் குழுவின் வழி காட்டுதல் படி பணிகளின் செயல்பாட்டு இயக்குநர் சபையில் செயல்பட்டு வரும் அனைத்துப் பணிகளை மேற்பார்வையிடுவதும், கண்காணிப்பதும் இவரது பணிகளாகும்.

184. பொதுச் செயலாளர் குழுவின் கூட்ட முடிவுகளையம் மற்றும் அனைத்துக் குறிப்புக்களையும் பதிவு செய்து பாதுகாக்க வேண்டும். இவரே ஆவணக் காப்பாளராகவும். அங்கீகரிக்கப்பட்ட செய்தித் தொடர்பாளராகவும் இன்னும் பொது இயக்குநர் இடுகின்ற அனைத்துப் பணிகளையும் செய்ய கடமைப்பட்டவர்.

185. பணிகளின் பொருளாளர் ஆலோசனைக் குழு உறுப்பினராக இல்லையென்றால், பொருளாதார சார்பான முடிவெடுப்பதற்கும் இன்னும் பொருளாதார விளக்கம் பெறுவதற்கும் ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு அவரை அழைக்கலாம்.

## இயல் - VII :

# பொருளாதார நிர்வாக முறை

186. சபையில் அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்ட மாநிலம் அல்லது தேர்வு நிலையில் இருக்கின்ற மாநிலம் தங்களுடைய வளர்ச்சிக்காக அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும். இடங்களையும் திரு அவையின் சட்டத்திற்கு உட்பட்டு வைத்துக் கொள்ள அனுமதி உண்டு.

187. சபையின் சொத்துக்கள் அனைத்தும் பணிகளின் செயல்பாட்டு இயக்குநரின் கண்காணிப்பில், பொது இயக்குநர் மற்றும் அலோசனைக் குழு உறுப்பினர்களின் வழிகாட்டுதல்படி செயல் முறைப் படுத்தப்படுகிறது. அதே போல மாநிலச் சொத்துக்கள் அனைத்தும் மாநில இயக்குநர் மற்றும் அவர்களது ஆலோசனைக் குழுவின் கண்காணிப்பில் சபையின் ஒழுங்குகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், நடைமுறைகளுக்கும் ஏற்ப செயல் முறைப்படுத்தப்படுகிறது.

188. சபையானது வாழ்நாள் முழுவதும் அடமானமுள்ள சொத்துக்களையோ, சிக்கலான நன்கொடைகளையோ பெறகூடாது. குறிப்பிட்ட கால அளவுள்ள அடமான சொத்துக்களையோ, நன்கொடைகளையோ மாநில இயக்குநர்கள் தங்களுடைய ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் படி, மிகுந்த கவனமுடன் ஆய்வு செய்து தேவைப்படின் ஏற்றுக் கொள்ளலாம். இதற்கு மத்திய குழுவின் அனுமதி பெற வேண்டும்.

## இயல் - VIII :
## மாநிலம்

189. அங்கீகரிக்கப்பட்ட மாநிலத்தை நிறுவும் உரிமை பொது இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவையே சாரும்.

190. ஒவ்வொரு மாநிலத்தின் அதிகாரப் பொறுப்பு மாநில இயக்குநரையே சாரும் மாநிலத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அவரே பொறுப்பு. இவர் மாநில அளவில் நடைபெறும் அனைத்துக் கூட்டங்களிலும் பங்கு கொள்ள உரிமை உண்டு.

191. குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சூழ்நிலைகளைத் தவிர மற்ற அனைத்திலும் சபையின் பொதுவான ஆட்சி அமைப்பு முறையே பின்பற்றப்பட வேண்டும். இந்த இயலில் குறிப்பிடப்பட்ட கருத்துக்களைத் தவிர மற்றவைகளில் ஒரு சில மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

மாநில நடைமுறைகள் அனைத்தும் மாநிலம் பேரவையினால் நிலை நிறுத்தப்பட்டு அவை பொது இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெற வேண்டும். இத்தகைய நடைமுறைகளைச் செயல்படுத்த முடிவெடுக்கும் போது அந்தந்தப் பகுதியின் உறுப்பினர்களின் சூழ்நிலையையும், பண்பாட்டுச் சூழலையும் மனதில் கொண்டு செயல்பட வேண்டும். அதே வேளையில் இவையனைத்தும் சபையின் ஒழுங்குகள் மற்றும் நடைமுறைகளுக்கு மாறுபட்டதாக இருக்கக் கூடாது.

192. **அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்ட மாநிலங்கள் :**

மாநில இயக்குநராகத் தேர்வு செய்யப்பட இருப்பவர் அர்ப்பண வாழ்வில் நிலைத்திருந்து நிரந்தர உறுப்பினராகி இருக்க வேண்டும். அவரது அர்ப்பணமான வாழ்வும், ஈடுபாடும், சபையின் மீது கொண்ட தனியாத அன்பும் முன்மதியுடன் செயல்படும் திறனும், தலைமைத்துவ பண்பில் சிறந்தவராகவும் இருத்தல் வேண்டும். இவர் தலைமை அதிபராக இருப்பதால், அருட்பொழிவு பெற்ற குருவாக இருத்தல் வேண்டும்.

193. மாநிலப் பேரவையினால் மாநில இயக்குநர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவரது பதவிக் காலம் நான்கு ஆண்டுகள். இரண்டு முறை மட்டும் தொடர்ந்து இதே பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். இவரது தேர்வு சபையின் பொது இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்களால் பதவியேற்பதற்குமுன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

194. மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்களும் மாநிலப் பேரவை உறுப்பினர்களால் தெர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தப் பணியைத் திறம்பட செய்யக்கூடிய, ஈடுபாட்டுடன் செயலாற்றும் ஒரு இணை உறுப்பினர் தம்பதியர் இக்குழுவில் இடம் பெறலாம். இவர்களின் செயல்பாடு சபையின் பொது

இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழவினரின் ஒப்புதலுக்குப் பின் நடை முறைக்கு வரும்.

195. முக்கிய முடிவுகள் மாநில ஆலோசனைக் குழுவினரின் மறைமுக வாக்கெடுப்பு மற்றும் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும்.

196. பின்வரும் நிகழ்வுகளுக்கு மாநில ஆலோசனைக் குழு தெளிவான முடிவு எடுக்க வேண்டும்.

(1) தொடக்கப் பயிற்சி, பயிற்சி, அர்ப்பண வாழ்வு மற்றும் நிரந்தரத் தன்மை போன்றவற்றிற்கு உறுப்பினரை அனுமதிப்பதற்கோ அல்லது மறுக்கவோ அல்லது தள்ளி வைக்கவோ வேண்டிய சூழ்நிலைகளில்

(2) நிரந்தரத் தன்மைக்கு உறுப்பினரை, பொதுக் குழுவிற்கு பரிந்துரை செய்யவோ அல்லது மறுக்கவோ அல்லது தள்ளிவைக்கவோ வேண்டிய தருணங்களில்

(3) அருட் பொழிவு பெற்று பணிகளுக்குத் தயாராக இருக்கும் உறுப்பினரை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ அல்லது தள்ளிவைக்கவோ வேண்டிய சூழல்களில்

(4) திருத் தொண்டர் நிலை மற்றும் குருத்துவ அருட் பொழிவு நிலைக்குத் தயாராக இருப்பவர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்து (பரிசீலித்து) இவர்களது விண்ணப்பங்களை பொதுக் குழுவுக்குப் பரிந்துரைப்பது.

(5) சபை ஒழுங்குகள் எண்கள் 91, 92 மற்றும் 125 இவற்றின் அடிப்படையில், அர்ப்பண வாழ்வில் இருக்கும் உறுப்பினர் அல்லது இணை உறுப்பினர் இவர்களை வெளியேற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டால் இதைப் பொதுக் குழுவிற்கும் பரிந்துரைப்பது.

(6) ஏற்கனவே அர்ப்பண வாழ்வில் இருக்கும் உறுப்பினர் அல்லது இணை உறுப்பினரை சபையின் உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்வதற்குமுன் பொதுக்குழுவிற்குப் பரிந்துரைப்பது.

(7) மாநிலத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களையும் வழி நடத்த

(8) மாநில இயக்குநர் அல்லது ஆலோசனைக்குழு உறுப்பினர்களில் ஒருவர் தன் பணியை துறக்க (ராஜிநாமா) முன்வந்தால் (இந்த முடிவுகள் அனைத்திலும் சபை பொதுக் குழுவின் அனுமதிக்குப் பின் தான் எதுவும் செயல்பாட்டுக்கு வரும்)

(9) மாநில ஆலோசனைக்குழு உறுப்பினரை நீக்க வேண்டுமென்றால் பொதுக்குழுவிற்கு பரிந்துரைக்க

(10) மாநிலச் செயலர் அல்லது மாநில பணிகளின் செயல்பாட்டு இயக்குநரின் பணித் துறப்பை ஏற்றுக் கொள்ள

(11) பகுதிகளையும், குழுக்களையும் அமைக்க

(12) பகுதி ஒருங்கிணைப்பாளர்களை நியமிக்க

(13) குழுத் தலைவரின் தேர்வை அங்கீகரிக்க மற்றும் பகுதி ஒருங்கிணைப்பாளரின் ஆலோசனைப்படி ஒருவரை நியமிக்க

(14) மாநில அப்போஸ்தலிக்க பணிகளுக்குத் தேவையான வழிகாட்டு முறைகளை ஏற்படுத்த

(15) சிவில் ஒப்பந்தம் மற்றும் தலத்திருஅவை ஆயர்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் இவற்றை அனுமதிக்க. இவையனைத்தும் சபை இயக்குநர் அல்லது அவர் பிரதிநிதியின் கையொப்பமிட்ட எழுத்துப்பூர்வமான அனுமதிக்குப் பின்தான் செயல்படுத்த வேண்டும்.

(16) மாநில வரவு செலவு கணக்கை பொதுக் குழுவின் அனுமதிக்காக அனுப்பப்படுவதற்குமுன் தயாரித்து அனுமதிப்பது.

(17) மாநிலத்தின் நிர்வாகப் பணிக்குத் தேவையான நிதியை சேகரிக்கத் தேவையான வரைவுத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தும் போது

(18) சபையின் ஒழுங்குகளுக்கும், மாநில நடைமுறை ஒழுங்குகளுக்கும் ஏற்ப உறுப்பினரின் பயன்பாட்டையும், அவரது சொத்தை பிரித்துக் கொடுக்கும் சூழ்நிலைகளில் தலையிட்டு செயல்படுவது

(19) பொது நிதியை திரட்டுவது மற்றும் செயல்முறைப்படுத்துவது, நிதி வழங்குபவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது. (நிதியின் அமைப்பை தெளிவாகக் குறிப்பிட்டு பொதுக் குழுவின் அங்கீகாரம் பெற வேண்டும்)

(20) மாநிலத்தின் செயல்பாடுகளுக்குத் தேவையான மற்றும் பல நிதி ஆதாரங்களைக் கையாள்வது

(21) மாநிலப் பேரவையைக் கூட்ட

(22) பயிற்சி இயக்குநர் மற்றும் இயக்குநர்களை நியமிக்க

(23) பயிற்சி நிகழ்ச்சிகளை அங்கீகரிக்க

மேலே கண்ட அம்சங்களில் மாநில இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுத் தான் செயல்படுத்த வேண்டும்

197. மாநில இயக்குநர் தனது ஆலோசனைக் குழுவினருடன்

(1) மாநில அளவில் சபை ஒழுங்குகளுக்கும் மற்றும் நடை முறை விதிகளுக்கும் ஏற்ப பல்வேறு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

(2) விரைவாக பொதுக் குழுவுக்கு, பின்வரும் ஆவணங்களின் ஒரு பிரதியை அனுப்பி வைக்க வேண்டும்.

- மாநிலக் குழுக் கூட்டத்தின் அறிக்கை

- தொடக்க நிலைப் பயிற்சியாளர்களின் நிரப்பப்பட்ட அனுமதி கேள்விப்படிவம் உரிய கையெழுத்துடன்.
- இதே போல பயிற்சியாளர், அர்பணம் போன்ற நிரப்பப்பட்ட படிவங்கள்
- வருட வரவு செலவுக் கணக்குகள்

198. **மாநிலப் பேரவை** :

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநிலப் பேரவை கூட்டப்படுதல் வேண்டும். மாநில இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும், நடைமுறை ஒழுங்குகளை புதிதாக உருவாக்கவும் அல்லது இருப்பதில் சில மாற்றங்களைச் செய்து சபையின் பொது இயக்குநரின் அனுமதியைப் பெறுவதற்கும், வரவு செலவு கணக்குகளை ஆய்வு செய்யவும் மேலும் மாநில ஆன்மீக வாழ்வு, அப்போஸ்தலிக்கப் பணி வாழ்வு, பயிற்சி நிலை மற்றும் மாநிலத்திலுள்ள பல்வேறு முக்கிய அம்சங்களைப் பற்றி கலந்துரையாடி தெளிவு பெறுதல்

199. மாநிலப் பேரவை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டது.

(1) நிரந்தர உறுப்பினர்கள்

- மாநில இயக்குநர்
- மாநிலக் குழு உறுப்பினர்கள்
- கடந்த மாநிலக் குழுவைக் கூட்டிய இயக்குநர்

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

- மாநில அர்ப்பண உறுப்பினர்களிடமிருந்து பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அர்ப்பண உறுப்பினர்களின் பிரதிநிதிகள், மாநில ஈடுபாட்டுடன் செயல்படும் இணை உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இணை உறுப்பினர் பிரதிநிதிகள்.
- இணை உறுப்பினர் பிரதிநிதி பொதுப் பேரவையில் கலந்து கொண்டதைப் போலவே இங்கும் பங்கு பெறுவர் (காண்க எண் 47)

200. மாநில இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் முறை பொதுப் பேரவையில் நடந்தது போல நடைபெறும் தெளிவுக்கு அத்தகைய வழிமுறைகளைக் காணவும்

201. **தேர்வு நிலை மாநிலம்** :

பொது இயக்குநர் மற்றும் அவரது அலோசனைக் குழு உறுப்பினர்களால் நிறுவப்பட்டதுதான் ‘தேர்வு நிலை மாநிலம்’ என அழைக்கப்படுகிறது.

202. தேர்வு நிலை மாநிலத்தின் தலைவரை சபையின் பொது இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள். முழு மாநில நிலையை அடைந்தவுடன் அதன் தலைவரை மாநிலப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

203. சபையின் பொது இயக்குநரின் அனுமதியுடன் தேர்நிலை மாநில இயக்குநர் செயல்படுவார். அதிகாரப் பூர்வமாக தேர்வு செய்யப்பட்ட மாநிலத்தின் அமைப்புகள், செயல்பாடுகள் படிப்படியாக தேர்வு நிலை மாநிலத்திற்கும் செயல்படுத்தப்படும்.

204. தேர்வு நிலையில் உள்ள மாநிலம் அங்கீகரிக்கப்பட்ட மாநிலமாக செயல்படுவதற்கு முன் பல செயல்பாடுகளுள் பின்வரும் அம்சங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

- போதுமான அர்பண உறுப்பினர்கள், ஈடுபாட்டுடன் செயல்படும் இணை உறுப்பினர்கள், (நிரந்தரமோ அல்லது நிரந்தரமின்மையோ) ஆகிய இவர்களின் எண்ணிக்கை கணக்கிலெடுக்கப்பட வேண்டும்.
- பகுதிகள் மற்றும் குழுக்களின் எண்ணிக்கை
- முன்னேற்றப் பணிகளுக்கான நம்பிக்கைக் கூறுகள்
- தனித்துச் செயல்படத் தேவையான போதுமான நிதி ஆதாரம்
- தனித்துச் செயல்படக் கூடிய மேலாண்மைக் கூறுகள்

# இயல் - IX :
# பகுதிகள் :

205. மாநிலத்தின் வரம்புக்குள், வாழும் இடத்தையோ, அல்லது பேசுகின்ற பொதுவான மொழியை மையமாகக் கொண்டு உறுப்பினர்கள் குழுக்களாக இணைந்து வாழ்தல், ஒரு பகுதிக்குள் இரண்டு மூன்று குழுக்கள் உள்ளடக்கியது.

206. பகுதிகள் வழிநடத்துநரின் வழிகாட்டுதலில் செயல்படும் இவர் அர்பண வார்த்தைப்பாடுகளை எடுத்து வாழ்பவராக இருப்பார். இவர் மாநில இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவார். இவரது பணிக்காலம் இரண்டு ஆண்டுகள் மட்டும். மீண்டும் ஒரு முறை புதுப்பிக்கத்தக்கது.

இவர் மாநில இயக்குநரின் வழி காட்டுதல் படி செயல்படுவார்.

207. **பகுதி வழிகாட்டுநரின் பணிகள் பின்வருமாறு:**

(1) சபையின் ஒழுங்குகளுக்கும் நடைமுறை ஒழுங்குகளுக்கும் ஏற்றவிதத்தில் உறுப்பினர்களின் வார்த்தைப்பாட்டு வாழ்வு, மற்றும் அர்ப்பண வாழ்வு இவற்றைக் கண்காணித்து அவர்களை வழிநடத்தும் பொறுப்பு இவரைச் சாரும்.

(2) தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள உறுப்பினர்களின் நிரந்தர அந்தஸ்து பெறுவதற்கு முன் வரையுள்ள அனைத்துப் பயிற்சி நிலைகளிலும் உள்ள ளஉறுப்பினர்களை வழிநடத்துவது

(3) வெவ்வேறு நிலைகளில் உறுப்பினர்கள் பயிற்சி பெறும் போது அவர்களது நிலை பற்றி மாநில இயக்குநருடன் தேவையான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்தல்

(4) குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு, மாநில இயக்குநரின் வழிகாட்டுதலில் உறுப்பினர்களை வழிநடத்துவது.

(5) உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக மாநில இயக்குநர் தருகின்ற அனைத்துப் பணிகளையும் ஏற்று செயல்படுவது.

வழிநடத்துநர் நடதுதுகின்ற அனைத்துக் கூட்டங்களும் சகோதர உணர்வுடன், திறந்த உள்ளத்துடன், பகிர்வு மனப்பான்மையுடன் நடை பெற வேண்டும்.

திருவுளச் சபையின் உறுப்பினர்கள் கடவுளின் திருவுளத்தை தங்களது அழைத்தல் வாழ்வின் மூலம் கடவுளுக்குத் தரும் தங்களின் பதிலிறுப்பின் வெளிப்பாடுதான் இந்தச் சபை ஒழுங்குகள்.

ஆவியானவரின் அருளுக்குத் தங்களைப் பணிவுடன் ஒப்புக் கொடுப்பதோடு, செபத்தின் ஒளியில் சபை ஒழுங்குகளைப் புரிந்து, தேர்ந்து தெளிந்து உண்மையுடன் அவற்றைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

## பின்னிணைப்புகள்

## Degree of Erection as Secular Institute of Diocesan Right

கடவுளின் அருளாலும் மற்றும் திரு அவையின் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டு

**எட்மட்ஸ்சன் ஆயர்**

இறைத் திருவுளச் சபையின் உறுப்பினர்களும் என் அன்புப் பிள்ளைகளுமான உங்களனைவர்க்கும் இறைவனின் பெயரால் ஆசிரும் வாழ்த்துக்களும் கூறிக் கொள்கிறேன்.

1958ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் திருவுளச் சபை பிறந்த இடத்தின் Vicar Apostolic of Grourd ஆயர், ஹென்றி ருத்தியர் OMI அவர்களால் இறைத் திருவுள அமைப்பு ஒரு பக்த சபையாக ஏற்படுத்தப்பட்டதை மனதில் கொண்டு அப்போஸ்தலிக்க ஒழுங்குகள் 'Provida Mater Ecelena' உறுப்பினர்களின் புனிதத்துவத்தை அடைவதற்குப் போதுமான பயிற்சியை தரும் என்பதை மனதில் கொண்டு இந்த பக்த சபை கனடா நாட்டிலுள்ள அனைத்து மறை மாவட்டங்களிலும் இன்னும் பல வெளிநாடுகளிலும் ஏறத்தாழ 200 உறுப்பினர்களுக்கு மேல் அப்போஸ்தலிக்கப் பணியிலும், பயிற்சியிலும் இருப்பதை மனதில் கொண்டு.

**( This is not yet completed. Soon I will send the Translation)**